19

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

தர்மர் அஸ்வமேதயாகத்தில் ஓர்பிரிவாகிய

தாமரைத்துவசன் நாடகம்

இஃது.

ம-ா-ா-ஸ்ரீ, முத்துரெட்டியாரால்

கோர்க்கப்பட்ட இந்நாடகத்தை

சூளை முனிசாமி முதலியாரால்

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

ரிஜிஸ்டர்செய்து.

சென்னை சூளை.

தனலக்ஷிமி நர்த்தன அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

...லை,] 1912. [அணா-5.

...விக்கிநேஸ்வரர்கோவில் தெருவு சூளை

0-1, 892 ...
N12
58874

உ

விநாயகர் துணை.

தர்மர் அஸ்வமேதயாகத்தில்
ஓர் பிரிவாகிய

தாமரைத்துவசன் சண்டை நாடகம்.

விநாயகர் கவி.

மாதமும்மாரிபெய்ந்து வாவிகள்கதலிதெங்கு
ஆதரவானசென்னெல ஆலயஞ்சோலைசூழும்
பூதலம்விளங்குங்கோர புரத்தினில்மேவுகின்ற
வேதத்துக்காதியான வினாயகர்வருகின்றாரே.

விநாயகர் வருகிற தரு.

கணநாதரிதோவந்தனர் சபைதழைக்க
கணநாதரிதோ வந்தனர்
கணநாதரைப்போற்றி கைகண்டபொருள்கீர்த்தி
இணையடிகளைவாழ்த்தி யிசைநதமாலைகள்சாத்தி-சுரு
இருபுரமமாதர்கள் சாமரைபோட
சரிகமபதவென நாட்டியமாட (கணநாதா)

அங்குசபாசமுடனே ஆரங்கள்மின்ன
ஆதுவாகன மேரியே
பொங்கச்சரிகைவேஷ்ட்டி தங்கக்கொலுசுமின்ன
கங்கணங்கையில்நீட்டி காலிலசிலம்புகாட்டி - சுரு
கனகநவமணியும் முடியில்துலங்க
தினமிகதொழுபவர் அடியினிலிலங்க (கணநாதர்)

தொந்திவயிர்குலுங்கவே முப்புரிநூலும்
சொர்ணமய மிலங்கவே
அந்திரதேவர்கள் தாவி அலர்ந்தமலர்கள் தூவி
சுந்திரத்துடனேவாவி சூழுங்கோபுரமேவி - சுரு
சொல்லியபதினெட்டு வாத்தியமுழங்க
நல்லகவிகளால் புலவர்கள்வாழ்த்த (கணநா)

மண்டலம்புகழும்வாசகன் கீர்த்திமிகுக்க
மயூரத்துவச ராசனை
தொண்டன்கதையில்நாட சொல்தவராமல்பாட
அண்டர்கள்வினையோட அடியேனையதங்கொண்டாட - சுரு
அஞ்சலிக்குதவிய ஆனைமாமுகனை
சஞ்சலியன்றேன்குண சங்கரன்மகனை (கணநா)

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் ரத்தினபுரத்தை யாளாநின்ற மயூரத் துவச ராசனுடைய வாசல் காத்துவராநின்ற கட்டியக்காரன சபை யலங்காரஞ் செய்யும்படி வருகிற விதங்காண்க.

கட்டியன்சொல் கவி.

எங்கினுங்கீர்த்திபெற்ற இரத்தினபுரத்தையாளும்
மங்களமாகவேதான் மயூரத்துவசராசன்
இங்கிதவாசல்கார்க்கும் யேருள்ளவீரசூரன்
சங்கையில்லாமல்நின்ற கட்டியன்வருகின்றானே.

கட்டியக்காரன் வருகிற தரு

மணிநவமுடிபெத்த மயூரத்துவசராசன்
வாசற்க்கதிகாரி வருகுறான்

அணிகலசமுமிட்டு அவையிலசல்லடக்தொட்டி
இணையில்லாக்கச்சைகட்டும் யிசைந்தநாமங்கள்போட்டும்-சரு

யெச்சரிக்கையென கட்டியங்கூற
யெச்சிடபேசியே நடையொயிலாக (மணிந)
அகடவிகடம்பேசி அமசன்கொலுவில்வாசன்
மகுடாாசர்கள்நேசன் மாதரன்புக்குப்பாசன்-சரு
மார்பினில்ரத்தின பதக்கமுமின்ன
சிருடன்சிரசினில் பாகையுந்துன்ன (மணிந)
கலிக்கத்துராவுமாட காலில்கெச்சைகள்பாட
அலிக்கிக்குலுக்கியோட் அதட்டி அதட்டிகாட-சரு
ஆச்கிரமுடனேவெகு பருக்கிர்ம்மமாக
சாக்கிரதையுடனே சிங்காரமதாக (மணிகவ)
அரண்டபார்வையுமாக மொண்டவிழியதாக
திரண்டபுசங்களாட சிரிப்புங்கெலிப்புமாக-சரு
சிங்காரமாய்க் கொலுமண்டபஞ்செய்ய
மங்களமாய்ராசன் வருவதுவுய்ய (மணிந)

பொது வசனம்.

அகோரதெப்படி யென்றால் மயூரத்துவசராசன் வாசல் காத்துவ ராநின்ற கட்டியக்காரன் சபைக்கிவந்துதிட்டங்களைப்பேசி யெச்சரிக்

கைசெய்துக் கொண்டிருக்கையில் இரத்தினபுரி பட்டணத்தை தகுத்தோடும் அரசுசெலுத்தி வராநின்ற மயூரத்துவசருசன் சபாவாகிய கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

மயூரத்துவசன் சொல் கவி.

உத்தமரவிகுலத்துக் கொருமணிதீபம்போல
எத்திசைபுகழுஞ்செங்கோல் ரணமுகவீரசூரன்
ரத்தினபுரத்தையாளும் ராசகெம்பீரனான
மத்திரிமார் அருகில்சூழ மயூரத்துவசனும்வருகின்றனே.

மயூரத்துவசன் தரு.

மண்டலம்புகழ்பெற்ற மயூரத்துவசருசன்
வாராரிதோபாரீர் கொலுவாக வந்தாரிதோபாரீர்
எண்டிசையோர்கள்வந்து நின்றுகைகுவித்திட
அண்டரனைவர்ஜெய மென்றுமேவாழ்த்திட—சரு

ஆதிமூலமென வேதமோதிடவும்
நாதகீதசங் கீதம்பாடிடவும் (மண்ட) ௧

மன்னரிநபுரமும வங்குசுடியினில்நாட
மகரத்தோரணக்கொடி வானத்துலாவியாட
கன்னியர் ஆலாத்தி ஷோமனைகளும்போட
காதல்கொண்டமாதர்கள் கண்டுமயங்கிவாட—சரு ௨

கனகநவமணிகள் முடியில்பளபளென்ன
தினகரனொளியைப்போல் சரிகைப்பளபளென்ன (மண்ட)

ராசராசர்பகிழ ராஜகெம்பீர தீரன்
ரணமுகத்துக்குஒரு சிங்கமெனுமுத்தாரன்
நேசமான அரி பூசைமரவா தீரன்
நித்தியந்தானதர்மம் சத்தியந்தவராமாரன்-சுரு
மேனத்தியதாய்பல மாலையணிந்திட
தோத்திரஞ்சொல்லவே சேனைகள்பணிந்திட (மண்ட)

ரத்னபுரத்தையாளும் ராஜலட்சுமிநேயன்
நாராயணன்பாதத்தை நம்புஞானப்பிரகாசன்
மெயத்திசைபுகழ்பெரியோர் யிருதயத்தினில்வாசன்
யெதித்தவர்களுக்கெல்லாம் யெமதர்மனெனனும்பாசன்-சுரு
யேசுபோகயிந்திர னைசெம்பீரன்
வாகுமாலைபுனை மேவுமுத்தாரன் (மண்ட)

மயூரத்துவசன் சொல் கவி.

சத்தியந்தான தர்மம் தாரணிதழைத்தயோங்கி
உத்தமஸ்ரீகள்வாழ்க ஒருகுறைவிலலாமற்றான்
எத்திசையெனதுசெங்கோல் யென்றைக்குப்பெருகவேண்டும்
கர்த்தனே ஆதிமூலக் கடவுளேபோற்றிபோற்றி.

மயூரத்துவசன்சொல் கவி.

நன்னெறிதவராமந்திரி நகுலத்துவசனேகேளாயிப்போ
இந்நிலம்நமதுசெங்கோல் இராச்சியமுழுதும்மாரி
பின்னபுயபெய்ந்துவாவி பெரிகியேனதிகளரபபி
செந்நெல்கள்விளைவுமுண்டோ க்ஷேமத்தைசொல்லுவாயே.

வசனம்.

அகோ வாரும் மந்திரியாகிய நகுலத்துவசனே நம்முடைய தேசங்களெல்லாம மாதமும்மாரிபெய்து யேரி, கால்வாய்களும், நதிகளும் நிரம்பி செந்நெல்களும் விளைந்து குடியானவர்கள் ஒரு குறைவுமில்லாமல் க்ஷேமத்தை யடைந்திருக்கிறார்களா சொல்லுமப்பா மந்திரியாகிய நகுலத்துவசனே.

நகுலத்துவசன் சொல் கவி.

பூதலத்தரசுசெங்கோல் புண்ணியராஜராஜே
மாதமும்மாரிபெய்ந்து வயலில்நெற்பயிர்களாலே
நீதியும்மூவாப்பூமி நிறைந்திடுங்குடிகளெல்லாம்
ஆதரவாகக்ஷேமானந்தமாகின்றாரே.

வசனம்.

அகோகேளுமையா சுவாமி மயூரத்துவசமகாராசனே நம்முடைய செங்கோல் நெறிதவராமல் நடந்துவருகிறது மேலும நமது தேசங்களெல்லாம் மாதமும்மாரி பெய்ந்து ஏரி, குளங்களும், நதிகளும், நிறம்பி நெற்பயிர்கள் மிகுதியாய் விளைந்து குடிகளெல்லாம் அதிகக்ஷேமத்தை அடைந்திருக்கின்றார்களையா சுவாமி.

மயூரத்துவசன் சொல் கவி.

தேவதாஆலயங்கள் தினமுமிரண்டுகாலம்
ஆலயப்பூஜைதீபம் அர்ச்சனைகுறைவில்லாமல்
தாவியபிராமணரும் சந்தியானைசிவயோகங்கள்
கேவலமுண்டோமந்திரி வேள்வியைச்சொல்லுவர்யே.

வசனம்.

அகோகேளும் மந்திரியாகிய நகுலத்துவசனே நமது பட்டணத்தில் யிராகின்ற சிவாலயம், விஷ்ணுவாலயங்களுக்கு பிரதிதினமும் ஆறுகாலபூசையும், அன்னநைவேத்தியமுதலிய தானதர்ம்மங்களும் ஒன்றேனுங் குறைவிலலாமல் நடந்துவருவதுடன் பிராமணாள் நெறிதப்பாமல் ஸ்நான பானம் சந்தியாவந்தனம், சிவயோகம், வேள்வி முதலாகியதும் குறைவில்லாமல் நடந்துவருகின்றதா சொல்லும் மந்திரியாகிய நகுலத்துவசனே.

நகுலத்துவசன் சொல் கவி.

மனுநீதிதவறிடாத மயூரத்துவசனேசற்றணையையா
அனுதினமாலயங்கள் ஆறுகாலங்கள்பூசை
வினவிபிராமணரும் வேதமும்வேள்வியோகம்
அனைவருஞ்சுகேக்ஷமையா அரசனே யறிந்திடீரே.

வசனம்.

அகோ கேளுமையா சுவாமி நமதுபட்டணத்தில் யிராகின்ற

சிவாலயம், விஷ்ணுவாலய முதலாகியதும் அறுகாலம பூசைநடந்து வருகின்றது அந்தணராகிய பிராமணர் பிரதிதினமும் ஸ்நானபான முதலானதும் செய்து வேதங்களோதி வேள்விமுதலாகியதும் குறை வில்லாமல் நடத்திவருகின்றார்கள் மகாராசனே.

மயூரத்துவசன் சொல் கவி.

இரத்தினபுரத்தைச்சேர்ந்த நகரிலுள்செனங்களெல்லாம்
நித்தியம்ஸ்நானபானம நிதம்நிதம்விஷ்ணுபூசை
பத்தியாய்செய்வதல்லால் பலருந்தெரிக்கவேண்டும்
சித்தமாய்பறைகள்சாத்தி செய்குவீர்மந்திரிதானே.

வசனம்.

அகோவாரும் மந்திரியாகிய நகுலத்துவசனே நமது ரத்தினபுரி பட்டணத்தில் வசித்திராநின்ற குடியானவர்களத்தனைமானபேருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் பிரதிதினமும் ஸ்நானபானங்களைச்செய்து ஸ்ரீமன்னாராயணரை யெந்நேரமும் மறவாமல் பயபக்தியுடனே தினம் தினம் பூசித்துவரும்படியாக தண்டோராபோடும்படி திட்டஞ்செய்து வாருமப்பா மந்திரியாகியநகுலத்துவசனே (அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.)

மந்திரி வசனம்.

அகோவேந்தனையா சுவாமி தங்களுடைய உத்திரவின்படி நமது இரத்தினபுரி பட்டணத்தில் யிராநின்ற அனைவருக்கும் தினப்பிரதியமும் ஸ்நானபானஞ் செய்து பூசாவிதிகளை நடத்தி ஸ்ரீமன்னாராயணருடைய பாதார விந்தகமலங்களைத் துதித்துக்கொண்டிருக்கும்படியாக நமது பட்டணமுழுதும் தண்டோராமூலமாய் தெரிவித்தாச்சுதையா சுவாமி.

மயூரத்துவசன் சொல் கவி.

மணத்தினில்மிகுந்தயெந்தன் மாதுசதிரேகளீர்
க்ஷணத்தினிலரண்மனைக்கு சேடிகளோடிச்சென்று
குணத்தினில்மிகுந்தமாது குமுத்துவமாலையைப்போ
க்ஷணத்தினிலழைத்தோமென்னு சீக்கிரம்வரச்செய்வாயே

வசனம்

ஆ! ஆ! வாருங்கள் நமது அரண்மனையில யேவல் பணிவிடைகளைச்செய்து வருகின்ற சேடிமார்களே நீங்களெல் அரண்மனைக்குச்

சென்று யென்னுடையதேவியாகிய குமுத்துவதியை நாம் அழைத் தோமென்று அதிக சீக்கிரமாக அழைத்துவாருங்களடி தாதிமார்களே

தாதிகள் வசனம்.

அப்படியே அழைத்து வருகிறேனையா சுவாமி.

குமுத்துவதி வருகிர வி.

கதிரவனுதயம்போலும் காந்தியும்பளபளென்ன
மதிமுகத்தழகுகொஞ்ச மாலைபூஷணங்கள்பூண்டு
அதிதுரிதமதாய்ராசன் அழைத்ததையறிவோமென்று
துதிபெருங்குமுத்துமாது சொகுசுடன்வருகின்றாளே.

குமுத்துவதி வருகிர தரு

குயில்போல்மொழிகள்பேசி ஒயிலாய்நடைநடந்து
குமுத்துவமாதுவந்தாள் நல்ல கொஞ்சியகிளியென
ரஞ்சிதம்போலவே (குமுத்)

மயிலெனும்சாயல்மேனி மாதர்கவுரிவீச
ஒயிலாய்நடைநடந்து உத்தமன் தன்னைக்காண-சரு

உதையசந்திர வதனவுல்லாசனி
அதிகவேகமாய் அரசனைக்காணவே (குயில்)

முத்துசுட்டிகள் துன்ன மோகனமாலையாட
பத்தியுடனேமூக்கில் நந்தும்புலாக்குமின்ன

யெத்திசையுமமகிக்கும் சித்திரப்பணிகள்துன்ன
உத்தமியானமாதர் சித்தம்மகிழ்ந்துநாட-சரு
நத்திபேசேலை யொட்டியாணமிலங்கிட
வித்தகிபிவளென உத்தமிசாது (குயில்)
கங்கணமுவாடகம செங்கயிலிலங்கிட
அங்கமதுபூரித்து அரசன்சபையைத்தேட
இங்கிதமாகவே இடையிற்சேலைதரித்து
பொங்கமுடனேமாதர் போற்றித்துதித்துநிற்க-சரு
பொர்க்கொடியிடையி லொட்டியாணமிலங்கிட
நறகிளியெனவெகு வார்த்தைகள்கூறியே (குயில்)
இருபுறமாதர்கள்வெண் சாமரைகள்போட
யெந்திழைமாதர்கள ஆலாத்திகளேந்திட
சரிகமாபதநிச வென்றுநாட்டியமாட
சந்தோஷமாகசிலர் மங்களம்பாடிட-சரு
சத்தியமேயிவள் நித்தியமேவெகு
வெத்தியுமேதரும பத்தினிமாது (குயில்)

குமுத்துவதி சொல் கவி.

பூதலத்தை ஓரடியா யளந்தமாயா
புருஷோத்தமனென்ஞான புராணவேதா
சீதைசிறைமீட்டு ராவணனைக்கொன்ற
செயராமா அரிமுகுந்தா கரியமேனி
ஆதியிலே கஜேந்திரனைக்காத்தமாலே
அண்டபகிரண்டமெங்கும் நிறைந்தசோதி
ஆதரவுஉம்மைவிட வேறுமுண்டோ
அச்சுதனேகேசவனே போற்றிபோற்றி.

வசனம்.

அரிகரி நமோநாராயணா, கேசவா; முகுந்தா, தாமோதரா, உன்னுடைய திருவடிகமலங்களுக்கு வந்தனம் வந்தனமைய்யா சுவாமி.

குமுத்துவதி சொல் தரு.

ராசனேசருணம் அடியாளைக்காரும் நேசனேசருணம்
பூச்சக்கிரக்குடையாளும் ராஜதேவேந்திரபோகா
நேசம்விடாதிர்மனம ஆசையென்னையகா (ராஜ)

சத்தியந்தவராதயென் உத்தமசீலனே
சித்தங்களித்தருளும் விசித்திரலோலனே (ராஜ)
பெண்ணையாளும்நாயகா உனைவிடதெய்வமுண்டோ
தனியானசெங்கோலுக் கிணையாயெதிரியுண்டோ (ராஜ)
அன்புடனேயெனக கின்பங்கொடுத்தபூபா
உம்பர்கள்புகழ்ந்திடும் நம்பும்தெய்வப்பிரதாபா (ராஜ)

குமுத்துவதி சொல் கவி.

வானவர்புகழ்ந்துவாழ்த்த மன்னவர்முடிவணங்க
ஞானமுமவிளங்கும்பிராண நாயகாயெனையிப்போது
சேனைசூழ்சபையிலிங்கே சேயவேயழைத்தசேதி
கோணமல்கிருடைசெய்து கோரியேஉரைசெய்வீரே

வசனம்.

அகோ கேளும் யென்னுடைய பிராணநாயகா அரண்மனையில் யிருந்தயென்னை இந்தருச சபையிலே அழைப்பித்தகாரணம் யின்ன தென்று திருவுளம்பத்தி அருள்செய்ய வேண்டுமையா சுவாமி.

மயூரத்துவசன் சொல் கவி.

ராஜபத்தினியேகேளாய் நான் அஸ்வயாகந்தன்னை
நேசமாய்ச்செய்யவேண்டி நேரிழையுனையழைத்தேன்.

குமுத்துவதி சொல கவி.

வாசமாய்உலகில்கீர்த்தி மன்னவருனைக்கொண்டாட
பூசனையாகந்தன்னைப் போற்றியேமுடித்திடுமே.

மயூரத்துவசன் வசனம்.

அகோவாரும் யெனது பிராணபதமாக விளங்கிவராநின்ற குமுத்துவதேவியே நான் அஸ்வமேதயாகஞ்செய்து தேவபக்தனாகவேண்டியதாக நினைத்திருக்கின்றேன் அதற்காக உன்னை அழைப்பித்தேன் யெனது பிராணநாயகி

குமுத்துவதி வசனம்.

கேளுமையா சுவாமி யெனது பிராணநாயகா அப்படியே தங்களுடைய மனதிஷ்டத்தின் படிக்கி உலகத்தில் கீர்த்திநிலைநிற்கும்படியாகவும் நாம்தேவானுகூலம் பெறும்படியாகவும் அஸ்வமேதயாகம செய்து முடியுமையா சுவாமி.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 12 MAR 1913 MADRAS.

மயூரத்துவசன் சொல் கவி.

பாதகம்விலங்கத்தேவர்பாத்தியனைகவேண்டி
நீதியாய்அஸ்வயாகம் நினைத்ததைமுடிக்கவேண்டும்
வேதசாஸ்திரங்களோதும் வேதியர்பெரியோர்தம்மை
சாதகமாகத்தானே சடுதியிலழைத்திடீரே.

வசனம்.

அகோவாரும் பிள்ளாய் கட்டியக்காரா நாமென்ன அஸ்வமேத யாகம் செய்யும்படிக்கி நினைத்திருப்பதால் நமது பட்டணத்திலுள்ள வேதப்பண்டித பாராயணரான பிருமணரை அதிகசீக்கிரமாக அழைத்துவாரும்பிள்ளாய் கட்டியம். (அப்போது பிருமணன் வந்து மயூரத்துவசனைக்கண்டு சொல்கிறவிதங்காண்க.

பிருமணர் சொல் கவி.

மன்னர்கள்சூழும்ரத்தின புரத்தினில்யாகம்யோகம்
நன்னயமுடனேசெய்ய நேத்தியசயிருக்குதிப்போ
யீசன்மாலயனும்வந்து இடைவிடாதிருக்கலாகும்
பூசனைக்குகந்தயாகம் புதுமையைச்சொல்லுவேனே.

வசனம்.

அகோவாரும் மயூரத்துவசமகாராசனே உம்முடைய செங்கோலும் அரசும் யென்றைக்கும் குறைவில்லாமல் வாழ்கக்கடவது நீர்

அஸ்வமேதயாகம செய்யும்படி நினைத்தமையால் யின்றைக்கு நல்ல நாள் முகூர்த்தமாக யிருக்கின்றபடியால் அஸ்வமேதயாகத்திற்கு ஆரம்பம் செய்யலாம் அதற்குத் தகுந்த குதிரையினுடைய பெருன்மையையும் யாகத்தை நடத்தவேண்டிய விதியும சொல்லிக்கொண்டு வருகிறேன் கேளும் மகாராசனே.

பிராமணன் சொல் கவி.

நாலுகால்வெள்ளைநிறம் வால்கருப்பு
நபந்திடுமபவழம்ஞ்சள் காதுபச்சை
கோலமுள்ளகுங்குவம்போல் கழுத்துமயிர்பேனி
கொண்டல் நிறமன்றதைநீர் கொண்டுவந்து
சிலமுள்ளநவகங்கை ஸ்நானம்செய்வித்து
திரேகமெங்குமாபரண மதிகஞ்சாத்தி
ஞாலமெங்குந்தெரியவிருதா வெளியைக்காட்டி
நடக்குமுந்தன்சேனையுடன் அனுப்பிடீரே.

வசனம்.

கேளும் மகாராசனே யாகமசெய்கிற அஸ்வமானமு வெட்படியிருக்கவேண்டுமென்றால் நாலுகால்வெள்ளை, வால்கறுப்பு, உதடுபவழமபோலவும், வலதுகாதுமஞ்சள், யிடதுகாதுபச்சை, கழுத்துமயிர் குங்குவமபோலொத்த நிறமாகயிராநின்ற பஞ்சவர்ணமுள்ள குதிரையைக் கொண்டுவந்து நவதீர்த்தங்களினலே ஸ்நானம்செய்வித்து திரேகமெங்கும் நவரத்தினங்களால் அலங்காரம்செய்து உம்முடைய கீர்த்தியை விருதாவெளியொன்று தங்கப்பட்டயத்திலெழுதி அதினுடையமுனெற்றியிற் கட்டி தேசத்து அரசர்களுடைய கீர்த்தியை அதினுடைய காலில்கட்டி அதற்கு பூஜாவிதிகளை நடத்தி யாகப்பிரதக்ஷணம்செய்து உம்முடைய ரதகஜதுறகபதாதிகளாகிய நான்குவகைச் சேனைகளுடனே ஒருவருஷம் தேசப்பிரதக்ஷணம செய்து யெதிர்த்த ராஜாக்களை சம்மாரம்செய்து பட்டணம்வந்து சேர்ந்ததின் பிறகு அஸ்வமேத யாகத்தை முடிக்கவேண்டும் மகாராஜனே.

பமூரர்துவசன் வசனம்.

கேளுங்கள் அந்தணர்களே அஸ்வமேதயாகத்தை தாங்கள் சொல்லியபடி முடிக்கிறேன் தங்களுக்கு வேண்டியவெகுமதிகளுந் தந்தேன்போயவாருமையா சுவாமி அந்தணர்களே.

மயூரததுவசன் சொல் கவி.

தாமதமில்லாச்சேர்வைக் காரனேசொல்லக்கேளாய்
பூமியிலுதான தர்மம் புகழ்ந்துநாம்செய்யவேண்டு
முழுமுன்செய்தவத்தால் நமபிட புதல்வனான
தாமரைத்துவசன் தன்னை சடுதியிலழைக்கிடீரே.

வசனம்.

அ ஆ!! வெருட்பிள்ளாய் கட்டியம் அஸ்வமேதயர்கம் செய்து தானதர்மங்களை முடிக்கவேண்டும் யெனது குமாரனாகிய தாமரைத் துவசனை அழைத்துவாரும பிள்ளாய் காவர்காரனே.

தாமரைத்துவசன் சொல கவி.

தானதர்மங்களோங்க தாமரைத்துவாஜன
ஞானமாமழைவிசெய்யும் ராசனார்திருவடிக்கி
சேனைகள்சூழமைந்தன சேடியராலேமைந்த
வானவாயலர்களதூவ வருகின்றானையைிற்றனே.

தாமரைத்துவசன் தரு.

தாமரைத்துவசராசன்வந்தான் சகலகலையுணர்ந்த
தாமரைத்துவச ராசன்வாறான்

பூமியில்புகழ்ந்தநேசன்   மாமுனிவோர்கள்வாசன்
பூமகள்பாவும்நேசன்   காமனைப்போலேபிரகாசன்-சுரு

கண்டனைதெண்டனை   சண்டைக்குமுண்டன்
அண்டினபேர்களை   ஆதரிக்கின்றவன் (தாமரை)

பெருத்துவந்தவற்கொருகாலன்   வெகுஆயுதசரவணை
மதித்துவந்தவற்கொரு   பாலன்
குதித்தாடக்குழல்   பகைக்குந்தந்தையைநாடி
கதிக்குமமாதர்களாட   மதிக்குமசங்கீதம்பாட-சுரு

மாரனுதாரனை   ஆரணவேதம
காரணகாரியம்   பூரணமாந்த (தாமரை)

தந்தைக்குகந்தபடிபாலன்   அவர்மனமதுமகிழவே
சிந்தைக்கலங்கிடாத   சீலன்
சந்திரகாமனையொத்த   சந்திரனைப்பழித்த
கந்தங்கதம்பம்மெத்த   இந்திரபோகமேபெற்ற-சுரு

இருவினைபகுதியும்   ஒருவழியாகியே
திருவுளமுமிகுந்த   கருவுருவாகிய (தாமரை)

மகப்பரிமுன்னேயேகவே   ரதகஜதுரகத்
கத்யாதுக்குகந்தபடி   யாகவே
போகத்திறனுபர்ந்த   யாகத்திறமேமந்திர
காகுத்தனைப்பணிந்த   நாகத்தைமீதணிந்த-சுரு

நற்பரதற்பர   கற்பகனருளை
அற்புதமெய்ப்பதம்   யிப்புவிக்குகந்த (தாமரை)

தாமரைத்துவசன் சொல் கவி.

வேதநாரணனேயும்மை வேண்டின அடியாருக்கு
ஆதரவாகின்ற அச்சுதாமுகுந்தமாலே
நீதியாய்நிறைந்தவஸ்த்து நிர்ம்மலசோதியான
சீதரா ... நா திருவடிக்கமலமேபோற்றி-

வசனம்.

ஓம்நமோ நாராயணா கோவிந்தா உனது திருவடிக்கமலங்களுக்குவந்தனம் வந்தனம்.

தாமரைத்துவசன் தரு.

சருணமெந்தயே கருணைசெய்குவாய்
அருணகிரணவடி வாணமெஞ்ஞானமூர்த்தி
தருணமுந்தன் திருக்கமலமேமெசுதி (சருண
சத்தியபூபனே கிசுதியப்பிரகாபனே
உத்தமியாள்யென்னைப் பெற்றமாதாவுக்கும்
சுத்தப்பராப்பிர்ம்ம கர்த்தனேவுன் திரு (சருண)
அன்னையும்பிதாவே இன்னமுந்தொழுவே
சொன்னமொழிஅவ்வை நன்னயம்வைத்தனுன்
உன்னிதமாகவே முன்னின்றுதொழுதேனே (சருண)
எந்தனையழைக்க உந்தன்சிந்தையில்சளிக்க
முந்தியெதிரியை யெந்தவிதத்திலும்
சிந்துசிந்தாகவே வெந்திடச்செய்குவேன் (சருண)

தாமரைத்துவசன் சொல கவி.

தந்தைதாய்திருவடிக்கு சருணமேசருணமையா
இந்தநற்சபையிலேதான் யெனையொருபொருட்டாயெண்ணி
சொந்தமாயழைத்தசேதி சொல்லுவீரடியேனுக்கு
விந்தையாய்ராசன்தானும் விபரமாய்விளம்புவாரே.

வசனம்.

அகோசேளுமையா சுவாமி யெனதுதந்தையே தங்களுடைய திவ்விய பொர்ப்பாதங்களுக்கு வந்தனம அடியேனைஒருபொருட்டாக அழைப்பித்தகாரியம் யின்னதென்று இருவுளம்பத்த வேண்டுமையா சுவாமி தந்தையே.

மயூரத்துவசன் சொல் கவி.

தாரணியாளுமைந்தா தாமரைத்துவசாகேளாய்
ஆரணப்படிக்கிஅஸ்வ யாகமேமுடிக்கவேண்டி
யோணிபரியின்பின்னே யிரதகசதுரகத்தோடே
சீருடன்போகவேண்டி சீக்கிரமாயழைத்தேன்மைந்தா.

வசனம்.

அகோவாரும் குமாரகே ஆகமவேதசாஸ்திரத்தின்படிக்கிநாம் அஸ்வமேதயாகம செய்யவேண்டும் அந்த அஸ்வத்தின்பின்னேநீயும

ரதகெஜதுரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைகளையுங் கூட்டிக்கொண்டு பூமிபிரதக்ஷணம் செய்யவேண்டி உன்னை அழைப்பித்தேனப்பா குமாரகா.

தாமரைத்துவசன் வசனம்.

அகோகேளும் யெனது தந்தையே தாங்கள் உத்திரவின் பிரகாரம் அஸ்வத்தின் பின்னால்யேகி பூமிபிரதக்ஷணம் செய்துவருகிறேன் சந்தோஷமாக அனுப்பிவையுங் தந்தையே.

மயூரத்துவசன் சொல் கவி.

அஞ்சலிசெய்யும்சேர்வைக் காரனேசொல்லக்கேளாய்
மிஞ்சியபரிகூட்டத்தில் விநோதவிச்சித்திரமான
பஞ்சகல்யாணியொன்று பரிகதுமேபிடித்துவாரும்
கொஞ்சியேதூதரோடிக் கொண்டுமேவருகின்றாரே.

வசனம்.

அகோ கேளும்பிள்ளாய் கட்டியக்காரா நம்மிட குதிரைலாயத்திற்கட்டியிருகின்ற பரிக்கூட்டத்தில் அதிக விநோதவிச்சித்திரமானதாய் பஞ்சகல்லியாணிப் புரவியொன்று யிருக்கின்றது அதை ஜாக்கிரதையுடனே ராவுத்தர், கிங்கிலியாகளை விட்டுபிடித்துக்கொண்டுசேவகர்காவலுடனே பிடித்துவரச்சொல்லும பிள்ளாய்க கட்டியனே,

அஸ்வம் வருகிற தரு.

பாரில்வானவர்மெச்ச	சிறக்வுபார்த்திக
பஞ்சகல்யாணிப்	புரவிவருகுதே
வாருடன்கழுத்தில்முத்து	மாலைசரங்கள்தொங்க
மாணிக்கமாலை	பூண்டுவருகுதே
சீரியேகிங்கிலியர்	கூரியவாள்தெண்டுகொண்டு
ஆயிரஞ்சேனைசூழவே	ஞரியர்சாமரம்போடயிருபுறமும்
நாட்டியம்அவர்	வாழ்த்தவே
நாலுகாலுக்குந்தண்டை	தங்கக்கொலுசதங்கை
நவரத்தினந்தொங்கலணி	காணவே
மேலும்சொர்ணமயமாய்	பதினெட்டுவாத்தியமும
வேடிக்கையாகமுன்னே	தோணவே

மணிமுடியணிக்க பயூரத்துவசனரசனை
வருந்தும்பாகசாலே தேடியே
அணியலரியாகச்சேனை பரிகில்சூழ்ந்துவரவே
அண்டர்பூமலர்மழை நாடியே (பாரில்)

பொது விருத்தம்.

காலமரிந்துணர்ந்து வேதியர்கள்கூடி
கனுஷ்ட்டானசிவயோக தானசர்யம்
ஆலயமாமோமகுண்டம் வளர்த்திமந்திரம்
அனுஷ்ட்டித்து அஸ்வமதை கைமூன்றாக்கி
ஞாலமெல்லாக்கிரிந்துலவும் பின்னேவீரர்
ரதகசமூம் மந்திரிகுலத்துவசன்கூடி
சிலமுள்ளதாமரைத்துவசன்தேர்மேல்
சென்றுரத்தினபுரம்விட்டு நடக்கின்றானே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் யெக்கியபிரமனுள் கூடியாக சாலே சோடித்து மந்திரபுரகத்துடன் ஓமம்வளர்த்தி குதிரைக்கி நவதீர்த்தங்களாலே ஸ்தானம் செய்வித்து ஆபரணாதிகளே அணிவித்து நெத்தியில் விருதாவெளியைக்கட்டி யாகசாலையை வலம்செய்துவைத்துதானதர்மங்களைச்செய்து மந்திரிபாகி நகுலத்துவசனையும் சேர்த்து ரதகஜதுரகபதாதிகளேயும் கூட்டிக்கொண்டு தாமரைத்துவசன் ரதமேரிக்கொண்டு அன்பத்தாரு தேசமெங்கும் சுத்திவருகிற விதங்காண்க

தாமரைத்துவசன் தரு.

போவோம்வாரீர்மந்திரிமாரே போவோம்வாரீர்
போவோம்வாரீர் அஸ்வத்தின் பின்னேமுன்கூடி
போவோம்வாருங்களிப்போ போர்வீரசூரரே
தாவும்பெகிரிகளே சண்டையிம்துணிந்திட-சுரு
சத்துருமித்துரு சித்தங்கலங்கவே
யெத்திசைதன்னிலும் வெத்திதலங்கவே (போ)
குடகுவங்காளம்பிந்ததேசம் வடுககன்னடமும்
படிமிசையுலகெங்கும பார்த்துமேபோகவும்
திட்முடனேராஜர் திகைத்துநடக்கவும்-சுரு

தீரமாய்வீரர்கள்	சாரியதாக
தேருடன்வாள்மெதை	கூருடனேக (போ)
சாளுவதேசம்மகதர்சீனம்	மாளுவதேசம்
சோளகத்தொளுவரும	குமுதமராடரும்
நாளுமேசென்று	நடக்குதேவேகமாய்-சுரு
நாடுகள்மேடுகள்	காடுகள்கடந்து
நாடுதுபரிபிதோ	தேடிநடந்து (போ)
குதிரையைவிடுப்போம்	யெதுத்தவரைப்
பதரிட	அடிப்போம்
சதுரங்கசேனையை	சண்டையில்பார்க்குறேன்
யெதிரிகளாய்வந்த	ராஜரைக்கெலிக்குறேன்-சுரு
யேரிடும்நாணியில்	கூரிடும்பாணம்
சீறியேவிடக்குறேன்	மீரியேகாணும (போ)

தாமரைத்துவசன் சொல் கவி.

அவனிகளெல்லாம்சென்று அரசரைச்செயித்துநாமும்
பவுனிபோல்வருஷபசுத்தி பட்டணமரிகில்வந்தோம்
நவமணிபுனைந்தகமலத் துவசனேசேனையோடும்
கவனமுந்தாகந்தீர்வோம் தண்டுவிட்டிறங்கிடாயே.

வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் நகுலைத்துவசமந்திரி நாம் தேசங்களெல்லாம்திரிந்து யெதுத்தராஜாக்களை யெல்லாம செயம்பெற்று வந்தோம் நாம்பட்டணத்தை விட்டுபுரப்பட்டு ஒருவருஷம் ஆகின்றது இப்போது நம்முடையபட்டணமாகிய ரத்தினபுரத்துக்கு அரிகில்வந்து சேர்ந்தோம் இவ்விடத்தில் தண்டுவிட்டிறக்கும் பிள்ளாய் பட்டியே

பொதுவசனம்.

அகோதெப்படி யென்றால் தாமரைத்துவசன் அஸ்வமேதக்குதிரையின்பின் அன்பத்தாரு தேசங்களும் சுத்திதிரும்பிவந்து தன்னுடைய பட்டணமாகிய ரத்தினபுரத்திற்கு அரிகாமையில் யிராநின்ற தடாகத்தில் தண்டுவிட்டிறங்கி யிருக்கும்போது அஸ்தினபுரத்தில் தர்மராசன்விட்ட அஸ்வயாகக்குதிரை வருகிறவிதங்காண்க.

தர்மர் அஸ்வமேகம் வரும்கவி.

தண்டுவிட்டிரங்கிசேனை தாமிசமிருக்கும்போது
மண்டலங்கீர்த்திபெற்ற வஸ்திநாபுரத்தில்தர்மர்
கொண்டுமேஅஸ்வயாகம் குறித்ததோர்குதிரைதானும்
கண்டர்கள்வீரர்சூழக் கடிகியேவருகுதன்றே.

தருமர் அஸ்வம் வருமதரு.

ராசன் தருமபுத்திர யாகக்குதிரைதானும்
நடந்துரத்தினபுரம் வருகுதே
பூசைசெய்துமந்திர யாகம்நிரைவேர
புரப்பட்டுரதகச துரகபதாதியுடன்
தேசமெங்குங்கீர்த்தி ராசனைசெயங்கொண்டு
தீரன்வில்விசையனும் பின்னால்நடந்துவர (ராசன்)

கலிக்கத்துராவு முத்துக் கழுத்திலாரங்கள்மின்ன
காலுக்குச்சண்டைக் கொலுசுங்கலகலென்ன
சொலிக்கநெத்திபட்டயம் துரைகள்மகிழ்ந்துபின்னே
துலைதூரதேசங்க ளெல்லாமதிரிந்துபின்னே (ராசன்)

மீசையுள்ளவரானால் பிடித்துமேகட்டவும்
விருதாகெளிபெழுதி நெத்தியில்ஒட்டவும்
காசினியரசர்கள் கண்டுமேவெழ்க்கவும்
காண்டிபன்வாருமென்று கருத்தினில்முட்டவும் (மீசை)

ராசர்களைவென்று ரத்தினபுரம்சென்று
நகுலத்துவசன்மந்திரி சேனையெதிர்க்கண்டு
கேசவநேரியே கெருடத்தொனிகொண்டு
கெலிப்புடனேபரியுங் களித்துயெதிரில்நின்று (மீசை)

தருமர் அஸ்வமேதக்குதிரையின் கவி.

இப்புவிதிரிந்துவந்து யிரண்டுமேஒன்றுக்கொண்டு
தப்பிலாயேழாவரங்கள் தாண்டியேகடிக்கும்போது
நற்புயமாலைபூண்ட நகுலனார்த்துவசனோடி
அற்புதபரிபிடித்து அரசன்முன்விடுகின்றனே.

வசனம்

அகோதெப்படியென்றால் அர்ச்சுனராசன் விட்ட அஸ்வமேதக் குதிரையும் தாமரைத்துவசன் அஸ்வமேதக்குதிரையும் ஒன்றுக்கொன்று யேழாறவாரங்கள் செய்து கடித்துக்கொள்ளும்போது தாமரைத்துவசன் மந்திரியாகிய நகுலத்துவசன் ஓடி அர்ச்சுனராஜன் விட்ட குதிரையைப் பிடித்துக்கொண்டுபோய் தாமரைத்துவசன முன்புவிட்டுயேதோ விச்சித்திரமான அஸ்வமேதக்குதிரை யொன்றுவந்து நம்மிட குதிரையுடனே யேழாரவாரங்கள் செய்துக்கொண்டிருந்ததை பிடித்துக்கொண்டுவந்தேன் மகாராசனே.

தாமரைத்துவசன் கவி.

தாஷ்டமுள்ளவீர தாமரைத்துவசனோடி
காட்டியநெத்திப்பட்டம் கருத்தினில்படித்துப்பார்த்து
மேட்டியோதர்மராசன் வீரனெழுதிக்கட்ட
காட்டவேவெகுண்டுராசன் கடுங்கோபமாகினானே.

வசனம்.

அஸ்வமேதக்குதிரையினுடைய நெத்தியில்கட்டிய தங்கப்பட்டயத்தில் யெழுதியிராநின்ற விருதாவெளியை வாசித்துப்பார்த்து தர்மராசன் பிரபலகீர்த்தி வானெனவும் மற்றதேசத்து ராசாக்களெல்லாம் கீழ்ப்படத்தக்கதாகவும் அதின்பின்னால் வருகிறவன் யீஸ்வரனோடு போராடிய அர்ச்சுனனென்றும் மீசையுள்ளவர்களானால் பிடித்துக்கட்டலாமென்றும் யெழுதியிருப்பதைப் பார்த்து அதிககோபங்கொண்டு தாமரைத்துவசன் சொல்லுகிற விதங்காண்க.

தாமரைத்துவசன் தரு.

அகப்பட்டகுதிரையை	நான்விடுவேனோ
பாவம்செய்யுந்தர்மம	அகமதுதானோ
பகைத்துவந்தபேரை	பஞ்சுபோலாக்குரேன்
பார்த்திபன்வந்தாலிப்போ	பவுஷைக்கெடுக்குரே (அகப்)
விருதாவெளியெழுதி	கட்டிடலாகுமோ
மேதினியரசர்கள்	கீழ்ப்படப்போமோ
சரியேயெனக்குஅவன்	சமர்த்தைநான்பார்குரேன்
சகலஅஸ்த்திரங்களால்	சண்டையில்கெலிக்குரே (அகப்

தர்ம்மபுத்திரன்யாகம் முடிக்கப்போறானே
சண்டையில்விஜையன் செயிக்கப்போறானே
பிர்ம்மாறிசிவன் பின்னுதவிவந்தாலும்
பெலத்தைஅழித்துநான் பிதரிடச்செய்குறேன் (அகப்)

தேவர்களுதவியாய்த் திரண்டுவந்தாலும்
தேசத்துமன்னர்கள் உதவிவந்தாலும்
சேவித்துக்கொண்டோட தீக்குறேன்பாணத்தல்
திருப்பிவந்தெதிர்தோரை க்ஷணத்தினில்மடிக்குறேன் (அக)

தாமரைத்துவசன் கவி.

பாரதமுடித்தே:யெற்ற பலத்தினால்யாகம்செய்ய
கோறியேகெர்வங்கொண்டு குதிரையைவிடுத்தான்தர்மன்
சூரனேபயித்தியக்காரன் சும்மாவுமிருந்திடாமல்
சரியாய்விஜையன்வார சமத்தைநாம்பார்ப்போம்வாசீர்

வசனம்.

தர்ம்மபுத்திர மகாராஜாவானவர் பாரத யுத்தியத்தில் அல்ப்பமான சிலரைக்கொன்றோமென்று கெர்வத்தினாலே குதிரையை அனுப்பிவைத்தான் பயித்தியக்காரன் சும்மாயிருக்காமல் வீறுதிவீரனென்னும் கெர்வத்தினாலே குதிரையை அனுப்பிவைத்தான் அவன் அஸ்வமேதயாகஞ் செய்ய யெத்தினப்பட்டதினால் அவன் யெவ்விதம் யாகத்தை முடிக்கப்போகிறான் நான் யென்னிடம் அகப்பட்ட குதிரையை விடப்போறேனோ இதின் பின்னால் வருகிற அகண்டிதவீர பராக்கிரமசாலியென்று பேர்பெற்ற அர்ச்சுனமகாராசனுடைய சமத்தைப் பார்ப்போம். அஸ்வத்தைவிடாமல் கட்டிவையுங்கோள்மந்திரிமார்களே.

பொது வசனம்

இவ்விதமாக தாமரைத்துவசன் தருமராசன் விடப்பட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி வைத்திருக்கும்போது அந்தச்சமையத்தில் புரவியைததேடிக்கொண்டு அர்ச்சுனமகாராசனும் கிருஷ்ணமூர்த்தியும் அனேகசேனை சயின்னியங்களுடனே கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

அர்ச்சுனன் கவி.

குதிரையின்பின்னுஞ்சேனை கொத்தவர்ரதமுங்காலாள்
அதிரகாகிருஷ்ணமீதவா அனுசாளுவன்பிரத்திமன்னன
மதகெஜமேகவர்னன் மணிமுடிவிஸ்வகேது
புதமுளள பிரவாகன் பார்த்தனுடவருகின்றனே.

கிருஷ்ணன் அர்ச்சுனன் தரு.

அரசர்கள்ரதகெஜ
அர்ச்சுனராஜனவராான்
அர்ச்சுனராசனவாரான்
காமுளளவிஸ்வகேது
திரமுளளபப்ராவாகன்
சேடிபர்ஷாமரம்
ஆடியேகூடியே

துரகப்பதாதியுடன்
ரதமதிலேறியே

காகுத்தன்மேகவர்ன்னன்
திடத்தஅனுசாளுவன்-சுரு
யிருப்ரம்வீச
மங்களம்பாட (அரச)

அரிபூசைமறவாத
ஆனைசேனையும்பரி
நெரிதவராதவேத
நெடியப்பிரத்திமன்னன்

அம்சத்துவசன்கூட
நீலத்துவசனுடன்
பிராமணர்கோஷ்டம்பாட
நெருங்கிச்சேனைமுன்னேட-சுரு

சேத்தியாய்ப்பதினெட்டு	வாத்தியமுழங்க
பார்த்திடுமரசர்கள்	முடிகளைவணங்க (அரச)
தேசதேசமெங்கும்	ராசரைசெயங்கொண்டு
சென்னெல்கன்னலவளரும்	ரத்தினபுரமுங்கண்டு
வாசமுடனேவந்த	குதிரையின்பின்னேசென்று
வந்தசேனையுடனே	யிங்கேயிரங்குமென்று-சுரு
வரிசையாக	கூடாரமிரங்க
துரைகள்கூடியே	சபைசதுரங்க (அரச)
காண்டீபத்துட்டனவர்	ஆயுதமெடுக்கவே
காணுமென்றுபரி	சேனைகளுந்துடிக்க
தூண்டியெதிரில்வந்தால்	துணிக்கப்பல்லைக்கடிக்க
துலங்கவேஞ்சக்ர	குடைகளும்பிடிக்க-சுரு
தோத்திரமேபுரி	மாதவன்மகிழ
சாஸ்த்திரபண்டிதர்	வானவர்புகழ (அரச)

அர்ச்சுனன் சொல்கவி.

வந்ததோர்விசையன்தானும் மாயனைவணங்கிப்போற்றி
முந்தியேதேசத்துக்கு முயர்ச்சியுமதிககான
இந்தவூரெங்குந்தேச மின்னசுராசன்பேரும்
சொந்தமாயெந்தனுக்கு சுவாமிநீர்சொல்லுவீரே.

வசனம்

அரிசரிநமோ நாராயணா உம்முடைய பாதாரவிந்தங்களுக்கு அடியேன் சரணம் நாம்யிதுவரைக்கும் திரிந்துவந்த தேசங்களுக் கெல்லாம் அதிக முயற்சியான யிந்த பட்டணத்தினுடைய ராசனேயமென்ன அவ்வரசன் பெயரென்ன யெனக்குத் தெரியும்படியாகச் சொல்ல வேண்டும் சுவாமி.

கிருஷ்ணன் சொல் கவி.

சொல்லுமெனவுரைத்தகாண் டீபாகேளாய்
சோலைசூழ்ரத்தினபுரத் தாசன்சத்தியன்
வல்லமைய்யாம் மயூரத்துவசராசன்
மைந்தனோதாமரைத் துவசனென்றும்

மெல்லியாள்திருமாதின் கிருபைபெத்தோன்
வீரன்வசம்குதிரைதா னகப்பட்டாக்கால்
முல்லைமலர்த்தண்டுழாய் மாலைபூண்ட
மும்மூர்த்திவந்தாலு முடிந்திடாதே.

வசனம்.

அசோகேளும் யெனது மைத்துனராகிய அர்ச்சுனமகாராசனே இந்தப்பட்டணமோ ரத்தினபுரமென்று பேருடையது அதார்கரசனோ அரிபூசைமறவாத சத்தியமே குடிகொண்டிருக்கப் பட்ட மயூரத்துவ சமகாராசனென்றும அவர்புத்திரனோ சுப்பிரமண்ணியருக்கு கிருன தாமரைத்துவசனென்றும அவர்மந்திரி நகுலத்துவசனென்றும மகா வல்லமைசாலியென்றும் கீர்த்திப்பெற்றவர்கள் அவர்கையில் நம்மிடகுதிரை அகப்பட்டுகொண்டால் மும்மூர்த்திகள் வந்தாலும் விடுவிக்கக்கூடாது யென்று கிருஷ்ணமூர்த்தியானவர் அர்ச்சுனனுக் குச்சொல் அந்தச் சமயத்தில் குதிரையின்பின்னால் போன சேகுவர் ஓடிவந்து அர்ச்சுனமகாராசனுக்கு சொல்லுகிற விதம்காண்க.

சேகுவர்சோல் விருத்தம்.

பரியுடன்தொடர்ந்துவந்த சேவுகர்களோடி
பார்த்தனடிவணங்கி விண்ணப்பமொன்று
தரணிதன்னில்ரத்தின புரத்தரசன்மைந்தன்
தாமரைத்துவசனஸ்வக் குதிரைபோடு
காமுடனே [illegible]துபரி யெதுத்தபோது
கடினமுடன்பிடித்தரசன் லாயர்தன்னில்
திமுடனேகாவலுடன் கட்டிவைத்தான்
சேதியிதுகேளென்று செபபினரே.

வசனம்.

கேளும் அர்ச்சுனமகாராசனே நம்முடைய குதிரையான துபிந்த ரத்தினபுரியாளாகின்ற மயூரத்துவசன் குமாரன் தாமரைத்துவசனு டைய அஸ்வக்குதிரையுடன் யெதுத்து யேழாரவாரம் செய்யும்போ துதாமரைத்துவசன் நமது குதிரையைப்பிடித்து லாயத்தில் கட்டி அனேகம்வீரரைகாவல் வைத்திருக்கிறானையா அர்ச்சுனமகாராசனே

அர்ச்சுனன் தரு.

ஆரவன் குதிரையைப் பிடித்தவனானன்
அஸ்த்திரத்தினால்க் கொல்வேன்ராசர்களே
சீருடனிருந்தாலும் சேவுகத்திராணிபை-சுரு
க்ஷணப்போதினில் கணைப்பாயவே
பிணைத்தோள்புயம் துணித்தேவிட (ஆரவ)

மூவரும்தேவரும் யாவருமேகூட
முன்னேயெதிர்த்துவந்தால் பிணைவிட்டுலடவே
மேவியக்காண்டிபக் கணையினால்சாடவே
விண்ணு மண்ணு முலகம யெண்ணிலடங்கிவாட்டவே-சுரு
வினையாகவே முனைவீரரும்
மனையாளமு யினிபோகவே (ஆரவ)

ரத்தினபுரமெல்லாம் தத்தளித்தேபோக
ஞன்விடும்பாணத்தால் மானிடருமசாக
யெதுத்துவந்தபேர்கள் யெமபுரயேபோக
யெல்லோரும்வாருங்கள் ரதமதிலேருங்கோள்-சுரு
இடிபோலவே கொடிதாகிய
விடும்பாணமே யெடுக்கோளிப்போ (ஆரவ)

தாமரைத்துவசனை சடுதியில் அடிக்குரேன்
சாரதிதேருடன் வாரியேமடிக்குரேன்
பூமி ஆகாயமெங்கும் கீர்த்தியைப்படிக்குரேன்
பிடித்தசபுதந்தன்னை க்ஷணத்தினில்முடிக்குரேன்-சுரு
பொங்கும்பரி யெங்கும்வர
யிங்குமிவன் சங்கைசெய்தான் (ஆரவ)

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்.

மைத்துனனேசபுதமுரீயுறைக்கவேண்டாம்
மண்டலத்தில்புகழ்படைத்த மயூரராஜன்
சத்தியத்திலரிச்சந்திரன் தானகர்ணன்
தவுத்தியத்தில்பிரகலாதன ஞெப்பனையுமல்ல

கெத்தவரைசமர்புரிய குமரகுருநாதன்றன்
குமுத்துவதிதேவியார் பார்வதியேயாகும்
புத்தியுள்ளதாமரைத்துவசன் மைந்தன்
புரப்பட்டான்சண்டைசெய்ய வுன்னாலாமோ.

வசனம்.

அகோ கேளும் அர்ச்சுனமகாராசனே நீர்சபதம் செய்யவேண்டாம் அந்த மயூரத்துவச மகாராசனே சத்தியத்தில் அரிச்சந்திரனும் தர்மத்தில் கர்ன்னமகாராஜனும் அரிபக்தியில் பிரகலாதனனும் சண்டைக்கு குமாரசுவாமியும் இவர்களெல்லாம் இந்த ராசனுக்கு ஒப்பல்ல அவர் பெண்ஜாதி குமுத்துவதேவி யென்றால் பார்வதியும் ஒப்பல்ல அவர்புத்திரனாகிய தாமரைத்துவசன் சண்டைக்குவந்தால் உன்னால் செயிக்க முடியாதப்பா அர்ச்சுனமகாராஜனே.

அர்ச்சுனன்சொல் விருத்தம்.

ஆகுமோவென்றுரைத்தீர் அவர்கள்தம்மை
ஆதரிக்கஉமதுகட னல்லால்வேறே
போகுமோராவணனை சங்கரித்து
புத்தியுள்ளவிபூஷணனை ஆதரித்தீர்
வேகமுள்ளகுதிரைதனைப் பிடித்தராசன்
மெலிந்திடவேயருள்புரியு மெந்தன்கோவே
ஆகமசாஸ்த்திரப்படிக்கி யாகம்செய்ய
அஸ்வம்வரக்கிருபைசெய்வாய் ஆதிமாயா.

வசனம்.

சருணம் சருணமையா சுவாமி பாண்டவாள் ஐந்துபேரையும் கார்ப்பது உமது கடனேயன்றி வேறுண்டோ முன்னால் ராவணனை சங்கரித்து விபூஷணனை ஆதரித்தீர் நம்முடைய குதிரையை பிடித்துக்கட்டின அரசனைவென்று அஸ்வமேதயாகம் நிரைவேரும்படிக்கு கிருபைசெய்யுமையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்திசொல் விருத்தம.

ஆதியெனும்வஸ்த்துவையும் அனுதினமும்பூசைசெய்யும்
அர்ச்சுனனேஉனக்கொருவர் யெதிரியுண்டோ

நீதியுடன்சண்டைசெய்ய சேனைதன்னை
திருத்துங்கள்வியூகமாய் ரெணக்களத்தில்
சாதகமாய்சாரதியும் செய்குவேனான்
சண்டைசெய்பரத்திகனாயிருக்கவோதான்
போதாவாய்சொல்லுமென்று வுறைத்தபோது
புகழ்ந்தருளிரத்திகனாய் யிருமென்றானே.

வசனம்.

அகோவாரும் அர்ச்சுனா நீயும் விஷ்ணுபக்தனாகையால் உனக்கு ம்யிந்த பூலோகத்தில் யெதிரியில்லை நீயே ஜெயமடைவாய் இந்த அமர்களத்திலே நமது சேனைகளை சக்கிரயூகமாய் நிறுத்தி சண்டைக்கு ஆரம்பம் செய்யுங்கோள் அதுவுமல்லாமல் நான் உனக்கு சாரத்தியம் செய்யவோ அல்லது ரதிகனாயிருந்து சண்டைசெய்யவோ சொல்லும் அர்ச்சுனமகாராஜனே

அர்ச்சுனன் வசனம்

கேளுமையா சுவாமி பகவானே தாங்களே யென்னுடன் ஒத்துமையாக யிருந்தும் ரதிகனாயிருந்து சண்டைசெய்யுமையா சுவாமிகிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

கிரீடிதானுரைத்தபோது கிருஷ்ணரும்மனங்களித்து
நெரியுடனுரைத்தபோது நியஷதாரசனுமப்போ
மருவும்வைகுந்தமேவும் மகாரதம்வந்துசேர
திருவருள்ரதத்தின் மீது தேவருபயேரினாரே.

வசனம்.

ஸ்ரீ கிருஷ்ணசுவாமியை அர்ச்சுனன் ரதிகனாயிருமென்றுசொன்னமாத்திரத்தில் கிருஷ்ணதேவர் வைகுந்தரதம் வரும்படி நினைக்க அப்போது தாரகன் வைகுந்தரதத்தைக கொண்டுவந்து நிறுத்த அந்தரதததில் கிருஷ்ணசுவாமியேறுகிற விதங்காண்க.

கிருஷ்ணன் தரு.

வைகுந்தரதமேரினார் அரிகிருஷ்ணதேவர்
வைகுந்தரதமேரினார்

வைகுந்தரநம்வர வானவர்கள்மலர்தூவ
மெய்குந்தனடியிணை மேவுமடியார்காவ (வைகு)
அரிகரியென்றவாசன் அடியவற்குகந்தநேசன்
கரிவரரக்ஷித்தபாசன் காகுத்தனென்றயீசன் (வை)
அண்ணுசாலிலன் அன்புக்குசந்தலோலன்
மெண்ணியஅநுகூலன் இரக்ஷிக்குமபரிபாலன் (வை)
பூதலமளந்தமாயன் புண்ணியர்க்குகந்தநேயன்
ஆதிமூலமென்றதூயன் ஆயர்வெண்ணெயுண்டவாயன் (வை)

கிருஷ்ணமூர்த்திசொல் விருத்தம்.

சண்டைசெய்யரதமேறி கிருஷ்ணதேவர்
சாரங்கமென்றவில்லை யெடுத்துக்கொண்டு
அண்டர்களுக்குங்கிடவே நாணியேத்தி
ஆரம்பமசெய்திடும்போதந்தவேளை
தெண்டுகெதைவாளுடனே தாமரைத்துவசன்
தேர்மீதிற்சேனையுடன்வந்தெதிர்க்க
துண்டனே உனைசும்மா விடுவதேது
தொடுக்குறேன்பாணமிதோ அடிக்குறேனே

வசனம்.

ஆகோதெப்படி யென்றால ஸ்ரீகிருஷ்ணதேவர் ரதமேறி சாரங்கமென்கிற வில்லையெடுத்து நாணேறிட்டு குணத்தொணிசெய்து அதாகுதம் செய்குறேன் என்று சொன்னபோது தாமரைத்துவசன்கேட்டுரதாளுடனும் சேனைகளுடனே வந்தெதிர்த்து அடாதுன்மார்க்கா உன்னைநான் சும்மாவிடுகிறதில்லையென்று கிருஷ்ணமூர்த்தியுடன் யெதுர்க்க அப்போது கிருஷ்ணமூர்த்தி தாமரைத்துவசனைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணன் தரு.

தாமரைத்துவசனேசண்டைக்குவாடா சாடுரேணிதோபாணம்
பூமியிடுதிடென்னவாகுதிரேர்வத்த போகுதேகவகோணம்
கோமுகன்மேலிருள் மூடியகணைகளும்
கொள்ளுதே மகனும்
சாமிவைதந்தரதம் ஓடும்விசைதன்னிலே

சனங்களும் கண்ணிலேகாணவே-சரு

சடுதியிலேவந்தன் ரதமது அழிய
கெடுதியிலே அணி கவசமுங்கிழிய
படுகுதேநாலு புரவியுமழிய
விழுகுதேகோடி சேனைகளை ழிய (தாமரை)

தாமரைத்துவசன் விருத்தம்.

சாரங்கமென்றவில்லை யெடுத்துக்கொண்டு
சண்டைசெய்யவந்தகிருஷ்ணனில்லும்கில்லும்
போர்விசையனுடனேநீர் ஓடவழியைப்பாரும்
புத்தியில்லாயுங்களைநான் யென்னசொல்வேன்
கார்வண்ணன்மேனியிருதாளினைக்கி
கருந்துளசிஅர்ச்சித்து பூசைசெய்ய
கோமுள்ள பாணமொன்று விடுத்தேன்பாரீர்
கோவிந்தாவல்லமையை யரிந்திடீரே.

வசனம்.

அகோ சேனா கிருஷ்ண நாராயணா சாரங்கமென்றவில்லை யெடுத்துக்கொண்டு நீர் யென்பேரில் சண்டைசெய்ய வந்தது போதும் போதும் அந்த அர்ச்சுனனுடனே நீயும் ஓடுகிறதற்குயிப்போதானே வழிபார்த்துக் கொள்ளுங்கள் புத்தியில்லாத உங்களுக்கு நான் என்னசொல்லப் போகிறேன் கார்மேகம் போன்ற திருவடிக்கி துளசியினால் அர்ச்சித்து பூசைசெய்யும் படிக்கு ஒரு பாணந் தொடுக்கிறேன் அரி அரி கோவிந்தா யென்னுடைய வல்லமையைச் சற்று நேரத்தில் பாருமையா சுவாமி.

தாமரைத்துவசன் தரு.

கிருஷ்ணநாராயணா கிரீடிசகாயனே
செற்வத்தையடக்குரேனே ரதகஜதுரகத்தைமடிக்குரானே
அஷ்டகெசமெங்கும் தட்டுக்கெட்டோடவே
நெட்டநெடுங்கிரி பம்பரமாடவே
முட்டவுங்கோதண்டம் அம்புபட்டோடவே-சரு

முரிந்ததேதலை யரிந்தேகுடல்
சரிந்தோரத்தம் பிரிந்தோடவும் (கிரு)

கிருஷ்ணன் தரு.

தள்ளித் துள்ளிவிழும் தாமரைத்துவசனே
தூக்கியேவிடுக்குறேன்பார் இலவம்பஞ்சாய்
காற்றினில் பறக்குதுபார்
கொள்ளிகொண்டமனம் கொடங்கொண்டுசொரியவே
உள்ளபாணங்களால் உலகெங்கும்தெரிய
அள்ளிவிடுவேன்பாணம் பிரசையும் அறியவே
கொள்ளைபோலநாய்நரி உயிரமுறியவே-தரு

கொடுத்தேனிரை மடித்தேயிப்போ
விடுத்தேன்ரதம கெடுத்தேவிட்ட (துள்ளி)

பொது வசனம்.

தாமரைத்துவசன் ஸ்ரீகிருஷ்ணதேவர் பேரில் உயுத்தியம்செய்வதை அர்ச்சுனன் படையிலிருந்த நீலத்துவசனும் அம்சத்துவமகாராசனும் நதரூடராகவந்து யெதிர்த்து தாமரைத்துவசன் பேரில் சண்டைசெய்கிற விதங்காண்க.

அம்சத்துவசன்சொல் கவி

சுவாமிமேல்யெதிர்க்கவந்த சண்டாளப்பயலேநீயும்
காமியோல்கெருவங்கொண்ட கள்ளனேஒருபாணத்தால்
பூமிஆகாயமெங்கும் யெரிபட்டவன்னிபோல
ஆமினிசெய்வேனென்று அமசத்துவசனுமெதிர்க்கின்றானே.

அமசத்துவசன் தரு.

அமசத்துவசராசனானே உந்தன் ஆனந்தப்படையைக்கொல்வேனே
இம்சைகளாகவொரு பாணத்தைதொடுக்குறேன்
யெதிர்த்திடும்தாமரைத் துவசனைத்தடுக்குறேன் (அம்)

அனந்தம்சமர்த்துடனே மூனந்தராகவனேநீ
அமர்களத்தினிலுனை சாடவோ
சினத்துவாய்வாஸ்த்தாலே படங்களும்
திசைக்கபாருதியில் போடவோ
கினைந்துப்பெண்பிள்ளையை யுரிகியுரிகிச்சிலர்
தேடியபாணத்தைக் கண்டுவாடவோ

முனைத்துக்கரிபரியில் பெரியவீரரும்
முன்னிற்காமல்சிலர் ஓடவே (அம்ச)

நீலத்துவசனும் யெதிர்த்துப்போருடியே
நெறநெறவென்று பல்லேக்கடிக்கவே
சூலம்கெதையுடனே வாளும்வில்லம்புகொண்டு
தொடுக்கச்சேனைக ளெல்லாம்தடிக்கவே
காலத்தமரம்போலே ரதமச்சும்வேராக
காலாகோலங்களாகப் படுக்கவே
ஆலத்தைப்போலவே இருவரும்சீரியே
அமர்களத்தினிலுயிர் மடிக்கவே (அமுச)

காண்டீபன் சேனைகள் அனைவருங்கூடியே
கண்டுகண்டுமனங் களிக்கவே
மாண்டுக்கிடக்கும் பிணம்வாரியேமேல்போட்டு
மனிதர்சிலர்களோடி ஒளிக்கவே
தாண்டியேதாமரைத் துவசனைப்பாணத்தால்
துளைக்குரேனென்று பரிமளிக்கவே
ஆண்டவனாகிய அரியைநினைத்துதிக்க
அனந்தங்கோடியஸ்த்திரம் அளிக்கவே (அம்ச)

தாமரைத்துவசன் சொல் கவி.

ஓடிவந்திருவர்நீலத்துவசனே அமசனோடு
சாடியேரணகளத்தில் சனங்களைமாய்த்திரிப்போ
ஓடியேவில்லைளைத்து ஞணம்புதொடுக்காமுன்னே
ஓடியேஓடிப்போக வழிதனைப்பார்த்திடீரே.

வசனம்.

அகோ வாருமையா அமுசத்துவராசனே நீலத்துவசனுமனே நீங்கள் இரண்டுபேரும் நம்முடைய சேனைகளை அதஞ்செய்துப்போட்டீர்கள் யிதோ நான் ஒருபாணந்தொடுக்குமுன்னே ஒடிப்போக வழிதேடிக்கொள்ளுங்கள் ராசாக்களே.

தாமரைத்துவசன் தரு.

அரசனேநீயாரு அமசத்துவசனே
அக்கினியாஸ்த்திரம் விடுக்குரேன்

வரிசைவரிசையாக ஆயிரம்ஐந்நூறு
பாணத்தானுக்களைக் கொல்லுவேன்
மணிமுடி தலைவிழ அணிகவசமும்மெழ (அரசனே)

அமசத்துவசன் தரு.

அன்னாருபாணத்தை அறுத்தேனொரம்பினால்
ஆகட்டுந்தாமரைத் துவசனே
முன்னும்பின்னாகவே தோணவொட்டாமலே
மூடிவிட்டேன்சந்திர பாணமே
முரிந்துவிடக்கரி யிரந்துவிடும்பரி (அன்)

தாமரைத்துவசன் தரு.

பேசுடாஉனக்கிப்போ யித்தனைபலமேது
இதோஒருபாணத்தை விடுக்குறேன்
வாதுபேசாமலே மார்பிலுரிகிட்
மரம்போலதேரினில் சாயவே
மனமதுகலங்கவே சேனைமேல் … புலம்பவே (பேசு)

அமசத்துவசன் தரு.

தேரினில்சாய்ந்தபோதே நீலத்துவசனும்
திகைத்துமனங்கலங்கி மூர்ச்சையாய்
வாரித்தேரின்மீதில் யெடுத்தோடக்கண்டு
வானவருங்கண்டு மயங்கவே
மண்டலமதிர்ந்திட சண்டைகள்புரிந்திட (தேரினி)

அனுசாளுவன் சொல் கவி.

மனுநீலத்துவசனுடன் மயங்கியே அமசன்கூட
இனியென்னசெய்வோமென்று யிருவரும்மூர்ச்சையாக
தனுவினைக்கைப்பிடித்து சாத்தகிகிருதபர்மன்
முனைஅனுசாளுவன்தான் மூவரும்யெதிர்த்திட்டாரே.

வசனம்.

அமசத்துவசன் நீலத்துவசன் யிருவரும் மூர்ச்சையாக விழுந்த மாத்திரத்தில் அனுசாளுவன், கிருதபர்மன், சாத்தகி இவர்கள் மூன்றுபேரும் தாமரைத்துவசனுடனே யெதிர்த்து சண்டைசெய்கிற விதங்காண்க.

அனுசாளுவன் தரு தொண்டிச்சிந்து.

என்னடாசிறுபயலே யெங்களை யெதுத்துவந்தாயிப்போ மடித்திடுவோம் உனைவிடப்போரதில்லை குதிரையை ஓடிப்போய்பிடித்துநீ கொண்டுவாடா (என்)

தாமரைத்துவசன் தரு சிந்து.

யேளிதம்பீ சொல்லவசமோ மூவரும் யெடுத்துஒருபாணந்தொடுத்துவிட்டேன் மாளவேவிதிவசமோ சாரதி வாகுள்ளகுதிரைகளை பிடித்துக்கொண்டேன். (யேளி)

அனுசாளுவன் தரு.

உக்கிரபாணமொன்று தொடுத்தேன்ராசனே
உன்னிடப்புரவிரதம் சாரதியும்
இக்கென்றெரியுதபார் சேனைகள்
இடுககிட்டலரியங்கே ஓடுதுபார் (உக்கிற)

தாமரைத்துவசன் தரு.

அதிவீரசூரர்களே வலிமையை
அக்கினிபாணத்தினாலே திக்கென்றெரிய
மகிமோசம்உங்களுக்கு வருகுது
வழிஜழி ஓட்டமாய் ஓடுங்கோள் (அதிவீ

ராசனைபென்பாணத்தினால் வாயினில்ரத்தமூங்
கக்குதேதிடசிக்கம் போகுதே
மோசமாய்பூமியிலே ஏமவாகம்
மூர்ச்சயாய்விழுந்தனர் பார்த்திடவே (அதிவீ)

பொது வசனம்.

அனுசாளுவன் கிருதபத்மன், சாத்தகி, மூன்றுபேரும் தாமரைத்துவசனுடைய பாணத்தினால் ரதத்தின்பேரில் மூர்ச்சையாய்விழுந்த மாத்திரத்தில் கடோர்க்கஜனன் குமாரனை மேகவர்னன் தாமரைத்துவசன்பேரில சண்டைசெய்கிற விதங்காண்க.

மேகவர்ணன்சொல் கவி.

மூவரும்விழுந்தபோர்து முனைந்திடமேகவர்னன்
ஆவலாய்ரதத்திலேறி அரக்கர்தன்மாய்கைகாட்டி

தேவ மதிமயங்க சேஷனும்நடுங்கிட
யாவரைக்கொல்வேனென்று அகாகுதம்செய்கின்றனே.

மேகவர்னன் தரு.

இருண்டமேகம்போலே கெர்ச்சித்தான் சத்தமேகமும்
திரண்டுவந்தாப்போலே வற்சித்தான்
மிரண்டுதேவர்களும் பிரண்டுபிரண்டுருள
வரண்டுநாவுநெஞ்சு சுருண்டுமேபோய்விட (இரு)

தாமரைத்துவசன் தரு.

பிர்மாஸ்த்திரமெடுத்தேன் தாமரைத்துவசனுன்
பெருமூச்செரிந்து தொடுத்தேன்
வர்மமாகப்பத்து னூறுனூறுபிரம்
கர்ம்பிரானயிருள் காடுதேடிவிடு (பிர்மா)

மேகவர்னன் தரு.

மலையையெடுத்துயெரிந்தேன் வலுமையினால்
தலைமீதில்போட்டு கடந்தேன்
துலைதூரமோடினாலும் சும்மாவிடுவதில்லை
வலையிலகப்பட்ட மீனைப்போல்மயங்கவே (மலை)

தாமரைத்துவசன் தரு.

வந்தமலையையுடைத்தேன் தெண்டினாலே
சிந்தைதிடமாய்ப் படைத்தேன்
விந்தையாகஅந்த சந்திரபாணமென்று
முந்தியேவிட்டேனே ஒன்றுதேரழியவே (வந்த)

மேகவர்னன் தரு.

தேரழிபாணந்தொடுத்தேன் உக்கிரமுடனே
பேரழியுப்படி கெடுத்தேன்
சரியாகசிலர் வாடிட ஓடிடவும்
தாருமாருடனே கூரிவிழுந்திடவும் (தேர)

தாமரைத்துவசன் தரு.

வேறோர்ரதத்திலேறினேன் சாரதியுடன்
சூரியப்பாணத்தால் தாரினேன்

வேறுதேருடனே பேசவர்னனுமே
சீர்பெருமநடைபோட காரணமோவென்று (வேறு)

அனுருத்திரன்பிரத்திமன்னன் கவி.

மனமதுகலங்கிமேக வர்னனும் ஓடிப்போக
அனுருத்திரன்பிரத்திமன்னன் ஆச்கிரமித்தெழுந்துசீரி
தனுவினைக்கையிலேந்திச்சாரதிபரிகள்பூட்டி
தனதிடரதத்திலேறிச்சண்டைக்கிவருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் மேகவர்னன் சண்டைசெய்ய முடியாமல் ஓடிப்போன மாத்திரத்தில் அரிதாளையிலிருந்த அனுருத்திரன் பிரத்தியுமன்னன் கண்டு ரதரூடராய் வில்லைவளைத்து தாமரைத்துவசன் பேரில் யெதிர்த்து பாணப்பிரயோகம் செய்கிற விதங் காண்க.

அனுருத்திரன்சொல் கந்தார்த்தம்.

சண்டையில்மிகுத்தவீரத் தாமரைத்துவசனேளாய்
அண்டிவந்தெதுத்ததேரை அதாகுதம்செய்துப்போட்டாய்
கொண்டதோர்மங்கிரவாளால் கொடுமைகளாகயிப்போ
துண்டுதுண்டாக வெட்டி.

தரு.

தூக்குவென்பாருய் பிலவும்பஞ்சாய்
காத்தினில்கோராய்
பார்த்திடிப்போதுன்னைக் கூத்தனுக்கிரையாக
நார்த்திசைதன்னிலே கீர்த்திமுழங்கிட (தூத்)

தாமரைத்துவசன் கந்தார்த்தம்.

அச்சமில்லாமலேதான் அனுருத்திரன்பிரத்திமன்னா
மெச்சியேஅரசனென்று வீம்புகளசொன்னவாய்க்கு
உச்சிதபாணமொன்று ஓங்கியேவிடுதேனிப்போ
சச்சிலே ஒடிந்துபோக.

தரு.

கண்டித்தேன்வாடா ரதந்தன்னை
துண்டித்தேன்போடா

கண்டியிட்டுவுன்னை தண்டனைசெய்குறேன்
மண்டலம்போற்றவே அண்டர்கள்வாழ்த்தவே (கண்டி

பிரத்திமன்னன் கந்தார்த்தம்.

அழிந்திடும்மாதத்தைவிட்டு அப்புரம்மருதேரேறி
கொழுத்திடுங்குதிரைபூட்டி குரூரபாணங்களேத்தி
இழுத்துமேநாணிபூட்டி யெய்திடப்பிரத்திமன்னன்
பழித்திடச்செய்து உன்னை.

தரு.

பார்தனில்மடிப்பேன் சொன்னவார்த்தைக்
கோரியேமுடிப்பேன்
நாரியர்யிகழவும் ஓரிகள்கூவவும்
கூரியபாணத்தை மாரிபோல்யெய்துநான் (பார்)

தாமரைத்துவசன் கந்தார்த்தம்.

பிரத்திமன்னவமே ீதான் பெண்டுகள்மெச்சவேண்டி
உரைத்திடும்வார்த்தையெல்லால் உலகத்தார்சொல்லுவார்கள்
வரத்தினால்வந்தபாணம் வாங்கியேவில்லில்பூட்டி
நெரித்திடபிருவர் ... ரில்.

தரு.

நெடியதோரழிய பார்பில்பட்டுகெடியவேபொழிய
படிமிசைமீதிலே இடிலெனவீழவும்
கொடியபாணத்தினாலே பிடிபோல்மூர்ச்சையாக (நெடி)

பப்பரவாகன் கவி.

அவனியில்மெச்சும்வீரா அனுருத்திரன்பிரத்திமன்னன்
புவியின்மேல்மூர்ச்சையாக புறப்பட்டுப்பல்கடித்து
செவிபினிலிருந்தசிங்கம் செற்சித்துவந்தாற்போல
நவமணிபுனேந்தபப்பிரவாகனன் வருகின்றானே.

வசனம்.

அகோ இதெப்படியென்றால் அனுருத்திரன் பிரத்திமன்னன் யிரு
வரும் தாமரைத்துவசனுடைய யாணத்தினாலே பூமியில் மூர்ச்சை

யாக விழுந்தமாத்திரத்தில் கெவுனியில் யிருந்தசிங்கமானது கெர்சித்துவெளிப்பட்டு வந்தால் யெப்படியோ அப்படிபோலே பப்ரவாக பல்லைக்கடித்து ரதாருடனாக தாமரைத்துவசன் பேரில்சண்டையாகிய உயித்தியத்துக்கு வருகிற விதங்காண்க.

பப்பிரவாகனன் தரு.

ஆரடா தாமரைத்துசனென்றொரு	ராஜனே
அரண்மனை ரத்தினபுரத்தைமேவிய	வாசனே
போரடா அமர்க்களம்சண்டைக்குநான் ஒரு	நேசனே
புண்டரீகன்பாதம அண்டியேதுதிசெய்யுப்	தாசனே-சரு
பூதலம்நடுங்கிடவே	மோதுவேன்பாணத்தினால்
பாதகன்மார்பிலுருவி	வாதனைப்பட்டேயவனும்
பாழாக்கவேரத்தம்	தாழாக்கவேசண்டைக்
காளாக்கவேசெவிக்	கோளாக்கவே
சேனைகளனைவரும்	திடுக்கிட்டுநடுங்க
வானவரனைவரும்	நடுக்கமிட்டொடுங்க (ஆரடா)

தாமரைத்துவசன் தரு.

இவனோபப்பிரவாகனனென்றொரு	சீலனே
எதுத்தேரதங்களைமதத்தையழித்திடுங்	காலனே
தவமுனிவோர்களும்வாசமதாகிய	ஞாலனே
சத்தியாள்கௌரிமீனாக்ஷியாள் அன்புக்கு	பாலனே-சரு
சாடுவேன்பாணத்தில்	ஓடுதே ஆகாசமட்டாய்
காடுமலைதீயெழும்ப	வாடுதேஜெனங்களெல்லாம்
காணுமலைஒன்றும்	தோணுமலைமக
நாணுமலைநின்றுக்	கோணுமலை
மாருதமாகவேகடல்களுங்	குழம்ப
சீருள்ளகரிபரி	சேனைகள்தளும்ப (இவனோ)

பப்பிரவாகனன்சொல் கவி.

ஆறுச்சுமடங்காயுன்னை அதாகுதம்செய்துதேரை
நீருநீராக்கிவிட்டு நிமிஷத்தில்பப்பிரவாகன்
கோரியேமந்திரம்செய்து கொடியதோர்விஷங்களாக
கூரியகணையைத்தாக்கிக் கொலைந்திடச்செய்கின்றேனே.

வசனம்.

அடாவாடா தாமரைத்துவசனுசனே நீ ஆருக்கும் அடங்காமல் சேனைகளையெல்லாம் அதமாக்கினாய் உன்னுடையரதம் சாரதி குதிரைகளையெனது குரூரபாணத்தினாலே அழித்துப்போட்டேனோடிப் போய்விடாய் தாமரைத்துவசனே.

தாமரைத்துவசன் சொல் கவி.

வாடவும்செய்வேன்பப்ரவாகனுநீயுமிப்போ
நாடகப்பெண்களுக்கு ரத்தினங்கொடுத்தகாலே
சாடாமல்விட்டுவிட்டேன் தாக்குவேயிதோவோர்பாணம்
நாடவும்ரதங்குலைந்து நடுங்கியேயோடினானே.

வசனம்.

அடாவாடா பப்பிரவாகனு நம்மிட நாடகசாலைப் பெண்களுக்கு வருஷத்திற்கொருதரம் ரத்தினங் கொடுப்பவனானதினாலே உன்னைச் சும்மாவிட்டு விட்டேனா யிதோ கொடியபாணத்தை விடுகுறேன் பாருமென்று பாணம்விட்ட மாத்திரத்திலே ரதமழிந்து பப்பரவாஹனன் ஓடிப்போனான் அப்போது கர்ணன் குமாரனான விஷ்வகேதுரதமேறி ரதாரூடனாகவந்து தாமரைத்துவசனைப் பார்த்துச் சொல்லுகிற விதங் காண்க.

விஸ்வகேதுசொல் கவி

நீர்தானோ தாமரைத்துவசனுசன்
நேர்ந்திடும் அஸ்வமதைப்பிடித்துக்கொண்டு
வாதாடிசண்டைசெய்து மன்னரெல்லாம்
மண்மீதில்மூர்ச்சைவிழச் செய்துவென்றாய்.
ஆதாரமாயுலகில்பிரகாசிக்கும்
அருணனிடபேரனான் விஸ்வகேது
நீதாக உனைக்கொன்று அஸ்வந்தன்னை
சீக்கிரத் விடுவித்துக் கொண்டுபோறேன்.

வசனம்

அடா நீதானா தாமரைத்துவசனுசனென்று சொல்லப்பட்டவன் நம்மிட குதிரையைப்பிடித்துக் கொண்டும சண்டைசெய்ப மன்னராஜாக்களையெல்லாம் மூர்ச்சையாக விழச்செய்தாய் இந்த உலகயாதீபந்த

மும் பிரகாசிக்கப்பட்ட சூரியகேதுவாகிறவனுடைய போத்திரனே விஸ்வகேது மகாராஜனென்றும் கேள்விப்பட்டதில்லையா இதோ நான் ஒரு பாணத் தால் உன்னைச்செயித்து குதிரையை விடுவித்துக்கொண்டு போகிறே ன்பாரும்பிள்ளாய் தாமரைத்துவசனே.

விஸ்வகேது தரு.

சூரியன்பேரன்விஸ்வகேதுவின் வல்லமையை
சினத்துக்காட்டுறேன் ராசனே
பெருமவூருஞ்செங்கோல் பிரபல்லியமுமழிய
பின்னிடச்செய்குறேன் பெண்ணிடக்கணையினால்-சரு
பெலத்ததேர்களும் குலைத்துபோகவும்
கனத்தசேனைகள் மலைத்துசாகவும் (சூரிய)

தாமரைத்துவசன் தரு.

தாமரைத்துவசன்பெண் பேரரியாமல்நீதான்
சாடினபாணத்தைத் தடுத்தேனே
ஆமிவனேயெனக்கு அணுவுமாத்திரம்யெண்ணி
அரைக்ஷணந்தன்னிலே சிரந்தனையறுக்குறேன் சரு
அண்டத்துவானவர் கண்டுஓடவும்
மண்டலத்துள்ளோர் நின்றுவாடவும் (தாம)

விஸ்வகேது தரு.

அணுவுயெம்மாத்திரமென்று ஆணுவமாயுரைத்தான்
ஆண்பிள்ளைத்திராணியை அரிகுறேன்பாரென்று
துணிவுடனேரதத்தை தாளுதூளாக்கினேன்
துளைத்துருவபாணங் களைத்திடச்செய்திட்டேன்-சரு
துருவமண்டல முருகிப்போகவும்
இருகிறென்றுமே திருகலாகவும் (அணு)

தாமரைத்துவசன் தரு.

வேரொருதாத்தின்மேல் யேறிஆயுதங்கொண்டு
விஸ்வகேதனன்மீதில் யேவினேன்
தார்புயமார்பினில் உருவியோடவும்ரத்தம்
சல்லடைக்கண்போலே தெல்லிவருங்கவும்-சரு

தளர்ந்துநோகவில் பிளர்ந்துபோகவும்
இளைத்துதேரினில் களைத்துசாயவும (வேரு)

அர்ச்சுனன்சொல் கவி.

சூரியன்பேரன்தானும் சோக்கமாய்மூர்ச்சையாக
வீரியன்விசையன்கிருஷ்ணன் வெகுகோடிசேனையோடு
தேரின்மேலேறிவில்லும் சீறியேகோபங்கொண்டு
பேரிகைமுழங்கராசன் புரப்பட்டுவருகின்றாரே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் விஸ்வகேது தேரின்மேல் மூர்ச்சையாகவிழுந்த மாத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவரும் அர்ச்சுனராஜனும் சேனைகளைக் கூட்டிக்கொண்டு மகாகோபத்துடனே ரதாரூடராய் தாமரைத்துவசன் பேரில் உயித்தியத்திற்கு வருகிற விதங்காண்க

கிஷ்ணன் அர்ச்சுனன் தரு.

வாடாவல்லமைத் தாமரைத்துவசனே
மணிமுடிசிதரவே அடிக்குரேன்
சாடவும்விழக் காண்டீபக்கணை
சடுதியிலோடியே துணித்துயோடவும்
ஓடாமல்வில்லும் வாரியடிக்குரேன்
உக்கிரபுகையினால் திக்குகள்மூடவும் (வாடா)

தாமரைத்துவசன் தரு.

காண்டீபாவுந்தன் வல்லமைகீர்த்தியை
சாத்திலிலவம்பஞ்சாய் தூர்த்துரேன்
தூண்டியேபாணத்தைத் துணித்திடச்செய்து
தொடுக்கபாணம் நூறாகவும்
மாண்டசேனைகள் கணக்குமாகுமோ
மாளுமுயிர்யெம லோகம்போகவே (காண்)

கிஷ்ணன் அர்ச்சுனன் தரு.

அன்னூறுயிரம் விடுத்துபாணமே
மன்னன்தாமரைத் துவசனையுந்தன்

மார்பினிலஸ்த்திரம் உருவிப்போகவே
சின்னபின்னமா பச்சரோருகவே
நெருஞ்சமாதிபரிகள் ணேகவே
திருகல்போகவே விசையன்தேரினை
திகைக்கப்பம்பரமென சுழண்டோடவும் (அன்)

அர்ச்சுனன்சொல் கவி.

தனஞ்செயன்கிருஷ்ணதேவர் தாமரைத்துவசன்மீதில்
வினயமாயழிக்கனூறு மெலிந்திடச்செய்யும்போது
மனஞ்சலிபாகத்தீர்த்து மாளாமல்யேழுநாளாய்
இனமுடன்மூவர்மீதில் யிரத்தமாய்சொரிந்ததென்றே

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவரும் அர்ச்சுனராசனும் யெதிர்த்து தாமரைத்துவசனுடைய ரதம் னூறுவரைக்கும் அழிய அதற்கும் பின்விடாமல் யேழுநாள் யிரவும்பகலும் சண்டைசெய்யும்போது மூவர்பேரிலும் பாணங்கள்பட்டு திரேகமாகியதமும் உதிரமாகச்சொரியும்போது தாமரைத்துவசன் சொல்லுகிற விதங்காண்க.

தாமரைத்துவசன்சொல் விருத்தம்.

என்னுடனே அரிகிருஷ்ணா விசையாநீங்கள்
யேழுநாள்யிரவுபகல் சண்டைசெய்தீர்
உன்னைநான்மெச்சிகொண்டு மனங்களித்தேன்
உரிதியுடன்சண்டைசெய்துக் கைக்கொண்டாய்நீ
பின்னையொருரதத்தின்மேல் யேறிக்கொண்டு
பிலமுள்ளபாணத்தைத் தொடுக்காமுன்னம்
சின்னபின்னமாகாமல் பின்னிட்டோட
திரும்புவீர்யிக்ஷணமே திரும்புவீரே.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணா நாராயணா அர்ச்சுனராசனே யென்னுடனே யேழுநாள்யிரவும் பகலும் சண்டைசெய்தீர்கள் உங்களை மெச்சிக்கொண்டேன் பாரத உயித்திய முதலாகொண்டு சண்டைசெய்துக் கைக்கொண்டவனுகையால் யென்னுடனே யெதுத்து போருடிநூறு ரதம்வ

ரைக்கும் அழித்துப்போட்டாய் ! இதோ மகர் பெலமுள்ள பாணத்தைத் தொடுக்கா முன்னமே சின்னப்படாமல் இருவரும் ஓடிப்போங்கள் கிருஷ்ணதேவரே அர்ச்சுனமகாராசனே.

தாமரைத்துவசன் தரு.

அரிகிருஷ்ணதேவ அர்ச்சுனராசனே
அர்த்தசந்திரபாணம் விடுத்தேனே
கரிபரியாயிரம்கலங்கவே கலைக்கவும்
காணுமலோடியபேர் கடக்கபோய்வலைக்கவும்
மரிபடாசேனைகள் பாணத்தாலிலைக்கவும்
மாரிபோலேசரம் மார்பினில் துளைக்கவும்
வாருதிபொங்கிவரும்சேனை யுரைத்தசொல்கிட்டவும்
காரிருள்மேகமிடித்தாப்போ லிடித்துப்பேய்முட்டவும்
சூரியனந்தங்கவுந்தக ளெடுத்துவாள்கிட்டவும்
ஆறுபோல்ரத்தம பெருசமுரிசதோடவும்-சுரு
அமரரும்பயந்தோடி யுறைந்திட
உமையாள்பாகனும்வாடி திகைத்திட (அரிகி)

கிருஷ்ணன் அர்ச்சுனன் தரு.

ஆணுவங்சூரியத் தாமரைத்துவசனே
அக்கினிபாணத்தை விடுசதேனே
நாணியேவுன்மனம் நடிங்கித்தேரழியவும்
நாடாமல்ஓடியே சேனைகள்ஒளிக்கவும்
ஆனியமேகம்போல் சரமாரிபொழியவும்
உடம்பெங்கும் உதிரங்கள் பீரிட்டுவழியவும்
கூடியேபேய்க்கணங்கள் ஒன்றாக்கொண்டிடிக்கவும்
ஆடியேபூதங்கள் யெதிரேடிப்பிடிக்கவும்
பாடியபேய்கள் உதிரத்தைகுடிக்கவும்-சுரு
பதியிலேதர்மர் யாகம்முடித்திட
விதியினால்நாம் குதிரைப்பிடித்திட (ஆணு)

தாமரைத்துவசன் சொல் விருத்தம்.

கோழியத்தாமரைத் துவசனேங்கி
திகைத்துமனம்வாடாமல் கோழிக்குஞ்சை

வீரமுடன்பரந்தெடுத்து ஓடினாப்போல்
விசையனிடதேரெடுத்து ஆகாயத்தில்
எரிந்தவிழசுழண்டெயிந்த போது அங்கே
யிந்திரன் தன்மகனிரந்தா னென்றுசொல்ல
சூரியமுமானிலத்தோர் யேங்கிவாட
கொண்டல்வண்ண னரிகிருக்கசெயித்திட்டானே.

வசனம்.

அர்ச்சுனராசனுடைய பாணத்தினால் தாமரைத்துவசனுடைய தேரழிந்த மாத்திரத்தில் தாமரைத்துவசனனவன் நால்நடையாகஒடி வந்து கோழிக்குஞ்சை பரந்த னது யெடுத்துககொண்டு ஒடினது போலே அர்ச்சுனனை ரதத்துடனே தூக்கி ஆகாயமார்க்கத்தில் யெரிந்தபோது தேவேந்திரன் பார்த்து தன்குமாரன் இரந்தானென்று சொல்லவும் சேனைகளின்னியங்க ளெல்லாம் யினிமேல அர்ச்சுனன் பிழைக்கப் போகிறதில்லையென்று சொல்லவும் தேரானது ஆகாயத்தில் கறகறவென்று சுழண்டுவரும்போது அர்ச்சுனன் தேர்க்கம்பத்தைவிடாமல் தழுவிப்பிடித்துக் கொண்டு ஸ்ரீகிருஷ்ண தேவரைநோக்கித் தோத்திரம்செய்கிறவிதம் காண்க.

அர்ச்சுனன்சொல் விருத்தம்.

காலபலமரிந்துசண்டை செய்யாமற்றன்
காரணங்களிந்தவிதம் சேர்ந்ததென்று
ஆலவிடமுண்டசிவ னரைப்போற்றி
அனுதினமும் பூசைசெய்யு மர்ச்சுனன்தான்
ஓலமிட அபயமென்று கிருஷ்ணனந்தா
ஓம்நமோநாராயணாவாசுதேவா
பாலசமுத்திரந்தன்னில் ஆலிலைமேல்பள்ளிகொண்ட
பரந்தாமாகேசவனே காத்திடீரே.

வசனம்.

நான் காலபலமரிந்து சண்டைசெய்யாமல் தாமரைத்துவசன்கையில் மடியலாச்சுது ஸ்ரீமந்நாராயணா, தேவகிநந்தனா, வாசுதேவகுமாரா, திருப்பாற்கடலின்மேல பள்ளிகொண்ட அச்சுதா, முகுந்தா, கேசவா, தாமோதரா, முராரிவைகுந்தா, பக்தவத்சலா, பரந்தாமா, உன்

னுடைய திருவடிகமலங்களுக்கு அபயம் அடியேனை யிந்தவேளை காத்து ரக்ஷிக்கவேண்டுமையா சுவாமி.

கிருஷ்ணர்சொல் விருத்தம்.

அபையமிடும் அர்ச்சுனன்தேர் விழுகா முன்னம்
அச்சுதனும்ரதமிறக்கிக்கீழே நின்று
உபயகரமேந்தியேதேரைத்தாங்கி
ஒருகுறையுமவாராமல் நிலைநிறுத்தி
சுபமெபரவேபரிநாலும் தடவித்தட்டி
சுந்தரமாய்மைத்துனரை யெடுத்தணைத்து
தபமுனிவர்கொண்டாட கிருபைவைத்து
தயாபரனார் அடியர்களைக் காத்திட்டாரே.

வசனம்.

அர்ச்சுனனானவன் தேருடன் ஆகாயத்தில் ஸ்ரீகிருஷ்ணா நாராயணா வென்று அபயமிட்டுக்கொண்டு வரும்போது பூமியின்கண்ணில் தேர்விழுகாத முன்னமே ஸ்ரீகிருஷ்ணதேவர் தன்னுடைய ரதத்தை விட்டு பூமியில்குதித்து இரண்டுகையினாலுமேந்தி தேரைத்தாங்கிபூமியில்நிலை நிறுத்தி சிக்குப்பட்ட குதிரைகளை நாலையுந்தட்டித் தடவி அர்ச்சுனனையெடுத்து மார்புடனே அணைத்து பயப்படாதீர் யென்று கிருபைவைத்தமாத்திரத்தில் தேவர்களும் முனியிஸ்வராளும் பார்த்து அடியார்களை ரக்ஷிக்கும் கடமை உன்னுதாகையால் அர்ச்சுனனை ரக்ஷித்தீர் சுவாமியென்று ஸ்தோத்திரம் செய்தார்கள்.

தாமரைத்துவசன்சொல் கவி.

[illegible]த்துமே திருட்டுக்கிருஷ்ணா ஞாயமோ பக்ஷபாதம்
பகைத்தவனென்னைக்கொல்ல பகைவனை நானுங்கொல்வேன்
திகைக்கநீசும்மாயிராமல் தேரையும்பிடிக்கலாமோ
அக்கிரமசகாயம்செய்தீர் அன்பிலுமிருந்திடீரே.

வசனம்.

கேளும் கிருஷ்ணா நாராயணா அர்ச்சுனனுடனே நான் போராட்வும் நீர் சும்மாயிராமல் நீர் யென்னுடைய யிருதயத்திலிருந்தும் யிப்படி திருட்டுத்தனம்செய்யலாகுமா பகையாளியை நான் கொல்வேன் யென்னைப்பகையாளி கொல்வான் நீர் தேரைத்தாங்கிநிலை நிறுத்த

லாகுமா பக்ஷபாதகமான காரியம் செய்தீர் ஆ ஆ நன்றாயிருக்கின்றது சுவாமி.

௭ தாமரைத்துவசன் தரு.

வேதங்களைத்திருடும்	சோமுகாசுரனை
மீனாய்ப்பிறந்துகொன்றீர்	நாராயணா
காதகமாயிரணியன்	ராக்ஷதன்பூமியை
கடிந்துபாயச்சுருட்ட	நாராயணா
பன்றியாகப்பிறந்து	பகைவினைக்கொன்றுமே
பார்தனைமிருத்தினீர்	நாராயணா
அன்றுப்பிரகலாதன்	அவனுக்காகத்தூணிலே
அகோரநரசிம்பமானாய்	நாராயணா
கொன்றுயிரணியனைத்	தொண்டனைரக்ஷித்தீர்
கோவிந்தாஅரிகரி	நாராயணா
வென்றிடசற்பந்தன்னைக்	கண்டபேரண்டமானீர்
வித்தைகளென்னசொல்வேன்	நாராயணா
மந்திரகிரிதன்னை	மத்தாகநாட்டியே
வாருதிகடையும்போது	நாராயணா
அந்தமாய்அமுதளிக்க	ஆமையாய்தாங்கினீர்
அச்சுதனேமுகுந்தா	நாராயணா
காதகமாகப்பிர்மபச்	சாரியாய்சிருவுருவம்
கள்ளவேஷங்கொண்டு	நாராயணா
பாதகமாய்மாவெலியை	வாளைதயாய்சிறையிருக்க
பாதாளமழுத்தினீர்	நாராயணா
கார்த்திகைவீரிய	அர்ச்சுனர்க்காகவே
பரசுராமனாய்	நாராயணா
க்ஷத்திரியாய்ப்பூமியை	நிர்மூலம்பண்ணினீர்
கெடுத்திசனைப்புன்னாலே	நாராயணா
சீதையைசிறையில்வைத்த	ராவணனுக்காகவே
ஸ்ரீரகுராமனாக	நாராயணா
பாதகவாலியைக்கொன்று	சீதையைசிறைவிடுத்தீர்
பலமெல்லாமரிவேனன்	நாராயணா
பாலகிருஷ்ணனாகிவந்து	யிடைச்சிகள்வீடுதோறும
பால்தயிர்திருடினீர்	நாராயணா

கர்வமுடனே போ வேதுபமன் சஞ்சனைக்கொன்ற
காரியமென்னசொல்வேன் நாராயணா
அடியார்களிடத்தினில் குடியாயிருப்பவனே
அண்ணுசுவாமிதுதிக்கும் நாராயணா
நெடியப்பரமாநந்தா நிறைந்தபராபரமே
கேசனேதாசற்கு நாராயணா
கீர்த்தியானவருக்கு தோத்திரமென்றெண்ணி
கெம்பீரமாயிராமல் நாராயணா
பார்த்தனுக்குசாரத்யம் செய்ததினாலுமக்கு
பவுஷெல்லாம்போச்சுதே நாராயணா

தாமரைத்துவசன்சொல் கவி.

நாற்றிசைதன்னிலேதான் நாராயணனுந்தனுக்கு
கீர்த்திகள்மெத்தவுண்டு கிரமமாயிருந்திடாமல்
சாரத்யஞ்செய்ததாலே சவலமாய்ப்போச்சுதிப்போ
வார்த்தைசொலலவாய்தானேது வலுமையையறிகுவேனே

வசனம்.

அகேசவரூந கிருஷ்ண நாராயணா உன்னுடைய வல்லசம கீர்த்தி அனேகமுண்டு யிப்பேர்ப்பட்ட பெருமைப்படைத்து அர்ச்சன ராசனுக்கு சாரத்தியம் செய்ததினாலே உம்முடைய பவுஷெல்லாம் போச்சுது யிதற்குபதில் சொல்லுவதற்கு வாயேது உங்கள்வல்லமையை சற்றுநேரத்தில் அறிகுறேன்பாரும சுவாமி.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

தோத்திரமாகக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணதேவர்தாமும்
பார்த்துமேகோபங்கொண்டு தாமரைத்துவசன்தன்னை
பூர்த்திடும்மலர்பாதத்தால் பூமியின்விழவுதைத்து
வேர்த்திடதலேயின்மீதில் வில்லினாலடித்திட்டாரே.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவர் தாமரைத்துவசன் துதிசெய்ததைக்கேட்டு திருவுளமகிழ்ந்து மறுபடியுங்கோபங்கொண்டு பாதத்தினாலே தாமரைத்துவசனை உதைத்தபோது தாமரைத்துவசன் மூர்ச்சையாகி பூமியில் விழுந்தெழுந்து சொல்லுகிற விதங்காண்க.

தாமரைத்துவசன் சொல் கலி.

தாமரைத்துவசன் தன்னை சுவாமியும் உதைத்தபோது
பூமியில் மூர்ச்சையாகி புத்திகள் கலங்கி தேறி
க்ஷேமமாய் ரதத்தின் மீதில் திருபமவும் யேறிக்கொண்டு
காமனையீன்றமாலைக் கண்டிக்கப்புறப்பட்டானே.

வசனம்.

கிருஷ்ணதேவரைப்பார்த்து தாமரைத்துவசன் கோபங்கொண்டு சமருகிய உயித்தியத்திற்கு வருகிற விதங்காண்க.

அர்ச்சுனன் சொல் விருத்தம்.

நாரணனே வைகுந்த ரதத்தைவிட்டு
நடித்து சாரதியம் செய்தீரானால்
பூருவமாய் தாமரைத்துவசன் தன்னை
பூதலத்தில் விழமடிப்பேன் ஒருநொடிக்குள்
ஆரணனார் செவிக்குரைக்க விசையன்தானும்
அப்படியே வைகுந்த லோகம்போக
தாரகனை ரதங்கொண்டு போகச்சொல்லி
சாரதியாய் ரதமேறி நடத்தினாரே.

வசனம்.

அகோவாருமையா சுவாமி வைகுந்தரதத்தை அனுப்பி விட்டு யெனக்கு சாரத்தியம் செய்தீரானால் அந்த துன்மார்க்கனான தாமரைத்துவசனை கொன்றுப் போடுறேனென்று சொன்னமாத்திரத்தில கிருஷ்ணமூர்த்தியானவர் தன்னுடைய ரதத்தை வைகுந்தம் போகும்படி தாரகனுக்குச் சொல்லியனுப்பிவிட்டு அர்ச்சுனன் ரதமேறி கிருஷ்ணமூர்த்தி சாரத்தியம் செய்கிறபோது அர்சுனராஜன் வில்லில் பாணப் பிரயோகம் செய்து தாமரைத்துவசனைப் பார்த்துச்சொல்லுகிறவிதங் காண்க.

அர்ச்சுனன் தரு.

தாமரைத்துவராசனே யிந்தபாணத்தால்
பூமியில்மடிக்க வாசனே-சுரு
பூமகள்நாயகன் வாமனரூபன்
காமனையீன்றவென் சுவாமிதானிருக்க (தாம)

தாமரைத்துவசன் தரு

காண்டீபாசனேகொல்லுவேனு இந்தபாணத்தால்
பாண்டவர்குலத்தை வெல்லுவேன்-சுரு
ஆண்டவனுமென்னைத் தாண்டவனுக்கிருஷ்ணர்
வேண்டியென்சிந்தையில் பூண்டுக்கொண்டிருக்க (காண்)

அர்ச்சுனன் தரு.

தேரையழித்துவிடுத்தேன் தாமரைத்துவசனே
பேரையும்பழிக்கக் கெடுத்தேன்-சுரு
சாரதிகுதிரைகள் வேறறசாகவும்
காரியருர்துவில் தூரியேபோகவும் (தேரை)

தாமரைத்துவசன் தரு.

உக்கிரபாணமொன்றுதொடுத்தேன் மருதேரின்மேலேறியே
திக்குகள்கடுங்க விடுத்தேன்-சுரு
பக்கென்றரிந்திட சக்கபாயருக்கவும்
கக்கவேஉதிரங்கள் மிக்கசெய்விக்கவும் (உக்கி)

பொது வசனம்.

அகோதெப்படி யென்றால் தாமரைத்துவசன் விட்டபாணத்தினால் இருவர் மீதிலும்பட்டுருவி தேகமெங்கும் ரத்தமயமாகச் சொரியும்போது கிருஷ்ணதேவர் சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

திசையெல்லாமுதிரம்பாய தேகமுஞ்செவந்துபோக
விசையினுவிவனைக்கொல்ல மேவாதென்றெண்ணங்கொண்டு
அசைவிலாச்சக்கரத்தை ஆண்டவர்நினைக்கும்போது
இசையுடன்சக்கரந்தான் பெதிர்வந்துநின்றதன்றே.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவருங்கு சரீரமெங்கும் உதிரம்சொரிய அர்ச்சுனனாலே யிவனைக்கொல்லமுடியாதென்று யோசித்து சக்கரத்தை நினைக்க சக்கரமானது சுவாமிகையில் வந்துநின்றது அப்போது கிருஷ்ணமூர்த்தி சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணன் தரு.

இந்தசக்கரத்தினூர்க்கொல்வேன் — பிவனை
யிப்போதுயிர்போக்கித்தப்பாமல் — வெல்வேன்
வந்ததோர்சக்கரந்துலங்க — மாயன்
வலக்கரந்தன்னிலேபலமுடனே — ஓங்க்
தொங்கிவபாரதுதுலுங்க — மார்பில்
அவளுந்திருமாதுவளையவிலங்க — இந்த
மலேவிட்டுக்குதிப்பதுசிங்கம் — மாயன்
வருகிருர்கொர்ச்சித்துமண்டியிட் — டங்கே
தலையினில்ரத்தினதங்கம் — மணி
தாவடம்ஆடப்பெருவதுபொங்கம் — இந்த
விசையன்றேகளைவிட்டுக்குதித்தான் — இந்த
மேதினியெங்கும்நடுங்கிஅலைக்கார் — வந்த
இந்திரலோகமண்டலங்குலுங்கவடித்தார் — இந்த
சக்கரத்தாலேநானென்கொன்று — இந்த
தாமரைத்துவசனைக்கடிகிறான்வென்று — இப்போ
திக்கெனசூரர்கள்நின்று — என்மேல்
சீக்கிரமெதிர்த்திட்டால்கொல்லுமேவ — னென்று-இந்த

தாமரைத்துவசன்சொல் விருத்தம்.

சக்கரத்தைச்கையிலேந்தி கிருஷ்ணதேவர்
சடிதியினிலோடிவரும் விசையறிந்து
உக்கிரமுள்ள தாமரைத்துவசன்கண்டு
ஓம்நமோநாராயணு வென்றுசொல்லி
திக்கெனவேதேரைவிட்டு குதித்தோடி
தேவாதிதேவனையும் பிடித்துக்கொண்டு
சக்கத்திலிடிக்கியே பிசகாமல்தான்
கசக்கிஞன்முழிபிதுங்க அசக்கினனே.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவர்கையில சக்கரத்தையெடுத்துக்கொண்டு ஓடி வருகிறவிசையை தாமரைத்துவசன்கண்டுநமோ ஓம்நமோ நாராயணு வாசுதேவா பரப்பிர்மம மூலாதாருவென்று மனதில் தியானஞ்

செய்துக்கொண்டு தன்னுடைய தேரைவிட்டுக்குதித்து ஓடிவந்து ஸ்ரீகிருஷ்ணதேவரைப் [illegible]து சக்கதி விடுக்க [illegible] தற்குப்படியாக அரக்கிறபோது அர்ச்சுனராசன் கண்டு சொல்லுகிற விதங் காண்க.

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

தேவாதிதேவன்தன்னை [illegible]
மூவ ரியானமாயன் மூர்த்தனைப்பிடித்தகையை
தாவாகியொருபாணத்தால் தறித்திடவில்மேலிட்டு
ஆவியைப்போக்கி வைக்க.

தரு.

அறுக்குறேன்பாராய் இந்தக்ஷணம்
சுருக்காகநேராய்
தருக்குள்ளசுவாமிமேல் சருக்கவொட்டாமலே
திருக்குகளாகவே முருக்கானபடிலே தான் (அரு)

தாமரைத்துவசன் கந்தார்த்தம்.

விடுத்திடும்பாணந்தன்னை மேவியேதாமரைத்துவசன்
தடுத்துபேழைச்சென்று தனஞ்செயன்தன்னைப்பற்றி
பிடித்துசக்கத்தில்கொண்டு பெருமூர்ச்சைவிடுவதாக
எடுத்துமேயிருவரோடே.

தரு.

எழுந்திருந்தானே ஆகாயத்தில்
யெழுந்திருந்தானே
விழுந்துப்போகாமலே இரண்டிக்கொ ழிக்குக்கை
அழுந்தப்பரந்தெடுத்து ஆகாயப்பரைப்போல (எழு)

பொது விருத்தம்.

அச்சுதனும் அர்ச்சுனனு மிரண்டுபக்கம்
மழித்திமேசக்கத்தி விடுகிக்கொண்டு
யெச்சுடனேயெழும்பியவ னரைக்குமபோது
யினிவிடாதென்றுசொல்லி யிருவர்தாமும்
அச்சமுடன்கண்மூடி மூச்சடக்கி
அசையாமலிருந்திடவே யிரர்தாரென்றும்

பெச்சிபேபோட்டு அஸ்வம் பிடித்துக்கொண்டு
மேன்மையுடன் ரத்தினபுரம் நடந்திட்டானே.

வசனம்.

தாமரைத்துவசனானவன் ஸ்ரீகிருஷ்ணதேவரையும் அர்ச்சுனராஜனையும் பிடித்து இரண்டு கக்கத்திலேயும் யிடுக்கி முழிபிதுங்குமபடி நசுக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமதி லெழும்புமபோது யிருவரும் திகிலடைநது மனதுதடுமாறி யினிநம்மை விடமாட்டானென்று பயமுற்று யிரந்துபோனவர் போலே மூச்சை அடக்கி கண்ணை மூடிக்கொண்டு அசையாமல யிருப்பதைக் கண்ட தாமரைத்துவசன் பார்த்து யிரந்துபோனார்க ளென்று யிருவரையும் பூமியிலே போட்டுவிட்டு யிரண்டு குதிரைகளையும பிடித்துக்கொண்டு ரதகஜதுரகபதாதிகளுடனே தனது பட்டணமாகிய ரத்தினபுரமநடக்கிற விருத்தாந்தங்க

தாமரைத்துவ்சன் தரு.

நடப்போம்நடப்போமே ரத்தினபுரம்
நடப்போம்நடப்போமே
நடப்போம் நடப்போம்மந்திரி நகுலத்துவசனே
இடப்படச்சேனையைச் சேர்த்துயொருநொடிக்குள் (நட)

வேதகோஷ்ட்டங்களுடன் வீணைதப்பூநபாட
வேகுக்காராகன்சேதி விரைவுடன்முன்னோட
பாதசாரிசேனைகள் பரிகளகரிகள்கூட
பந்திப்பந்தியாய்ரதக் காரநமுனைலோட (நட)

தெருவீதிகள்தோறு தோரணங்கள்கட்ட
தெய்வலோகம்போல பந்தங்களுமூட்ட
வருவதைக்கண்டந்த மாதர்களுங்கிட்ட
மங்களம்பாடி ஆலாத்திகளும்நீட்ட (நட)

விசையனை வென்றுநாம் வெத்திகளைக்கொண்டு
வீரப்பிரியுடனே யாகமுடிக்கயின்று
இசையுடன் தந்தையை நமிப்போதேகண்டு
யிணையடிகளைப்போற்றி யெல்லோருமேதொண்டு (நட

தாமரைத்துவசன்சொல் விருத்தம்.

தேசமெங்கும்பரியுடனே கூடச்சென்று
செயங்கொண்டுதாமரைத் துவசன்மந்திரி
நேசமுடன்நகுலத்துவசன்கூட
நேத்தியாயிரண்டுஅஸ்வம் பிடித்துக்கொண்டு
தாசனைப்போல் மயூரத்துவசராசன்
தந்தையடிபணிந்து கைக்கட்டிக்கொண்டு
பாசமுடன்யாகம்நிறைவேத்துமென்று
பரிந்துசிலவார்த்தைகளைக் கூறினானே.

வசனம்.

சரணம் சருணமையா சுவாமி தேசமெங்கும அஸ்வத்தின்பின்னே திரிந்து யெதிர்த்த ராஜாக்களை யெல்லாம் வென்று யிரண்டுயாகக்குதிரையுடனே வந்தேனய்யா சுவாமி தந்தையே.

மயூரத்துவசன்சொல் கவி.

மைந்தனேஉலகையாண்டு செம்மிசம்விளங்கிவாழி
இந்தஓர்அஸ்வத்தோடே இனியொருஅஸ்வமேது
எந்தவூராசன்செய்த யாகத்தைக்குரைவுசெய்தாய்
விந்தையாயெந்தனுக்கு விபரமாயுரைத்திடீரே.

வசனம்.

அகோ வாருமப்பா குமாரகா மகாராசனாக சிரஞ்சீவியாக இந்தவுலக பல்லாரம் ஒரு குடைநிழலில் அரசுவாய் யெழுந்திரும் நம்மிட அஸ்வத்துடன்கூட யேதோ ஒரு அஸ்வமிருக்கின்றதே அதுயேது யெந்தராசன் யாகத்தைக்குறைவு பண்ணினாய் அதை யெனக்கு விபரமாய் தெரியச்சொல்லு மப்பா குமாரகா.

தாமரைத்துவசன் தரு.

தந்தையே அஸ்வத்தின்பின்னே சேனையுடனே
தாரணியைசுத்திவரும் வேளைதன்னிலே
இந்தஓர்குதிரைதன்னை பிடிக்கும்ராசனை
எமபுரிக்கனுப்பிவிட்டு செயமதுகொண்டேன்
கொங்குவங்காளம்அங்க மகதர்சீனமும்
குருகுவடுகதேசம் வளுவதேசமும்

மாளுவங்குடகம்ணட மகதமேதசமும்சத்தி
துங்கமூனகாசி தேசமெங்குமே
மங்களகோதாவரி மகாநதிகளும்
மலையடிசுனைகளாறும் வாவிஓடையும்
எங்கும்நவதீர்த்தங்களும் ஆடியேவந்தேன்
இன்னகரம்வந்தவுடன சேதிகேளய்யா
அஸ்தினாபுரத்தில்தர்மர் யாகஞ்செய்யவே
அஸ்வத்தைதேசத்தில் விட்டனிப்பினை யா
மெச்சுபுகழ்விசையனும் கிருஷ்ணதேவரும்
விஸ்வகேதுமேகவர்னன பப்பிறவாகனன்
மன்னவர்அனேகர்பின்னே வந்துஅஸ்வத்தை
மடக்கியேபிடித்துக்கொண்டு வந்தெதுத்தோரை
சின்னபின்னமாயடித்து சேனையோடவும்
தேவன்மாயன்விசையனை கொன்றுவிட்டேயான்
சிந்தைமனக்களிப்பாக இரண்டுபரியும்
சீக்கிரத்தில்கொண்டுவந்தேன் யாகஞ்செய்யய்யா
கந்தமலர்த்தாளிணைக்கி சருணமையனே
கருணைபுரிந்தென்னையாளும் யெந்தன்தந்தயே (தந்)

மயூரத்துவசன்சொல் கவி.

செய்யாதவேலையெல்லாம் செய்யவுமதகுமோமைந்தா
கையாரப்பூசிக்காமல் காகுத்தன்கிருஷ்ணர்தம்மை
நையவேமெலிந்துவாட நலித்துமேவந்தபாவி
அய்யோநானென்னசெய்வேன் அரனிடசெயலிதாமே.

வசனம்.

அகோ வாருமப்பா குமாரகர் நீயிப்பேர்ப்பட்ட வேலை செய்யலாமோ அனேககர்லமாக தெரிசிக்க வேண்டுமென்று யெண்ணி யிருந்த ஸ்ரீகிருஷ்ண நாராயணசுவாமியை வதைசெய்துப் போட்டுவந்த பாவி அய்யய்யோநான் குடுத்துவைக்காத பாவியாகினேன் யென்ன செய்வேன் கர்த்தனே.

மயூரத்துவசன் தரு.

திருவடிக்கேசருணம் யென்மேல்
கிருபைசெய்வாய்சருணம்

திருவடிபோற்றினேன் ஸ்ரீகிருஷ்ணதேவனே
ஒருபொருளாகிய ஓம்நமோநாராயணா (திரு)

வேதமுதலானே யெனக்கு
ஆதாரமானவனே
மாதவாகேசவா வைகுந்தவாசனே
சீதானந்தனே தேவகிமைந்தனே (திரு)

ஆதிமூலப்பொருளே ஞான
சோதியெனக்கருளே
பாதாரவிந்தத்தைப் பத்திபணுதினம்
ஓதுமடியவர்க்கு ஓடிவந்தருள்செய்யும் (திரு)

வெண்ணெயுண்டவாயனே அன்பு
புண்ணியர்கள்நேயனே
யென்னுமுன்திருவடி திண்ணமாய்ப்போற்றும்
அண்ணாசாமிதாசன் அன்புக்குகந்தவனே (திரு)

பொது வசனம்.

அகோ ரெப்படியென்றால் மயூரத்துவசருசன் சுவாமியைத்தோத்திரம் செய்துக்கொண்டிருக்க ரணக்களத்தில் விழுந்து கிடக்கும் ஸ்ரீகிருஷ்ணதேவருப அர்ச்சுனராஜனும் மூர்ச்சை தெளிந்தெழுந்து சொல்லுகிற விதங்காண்க.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்லும் கவி

அருணனும்மறைந்துபோக அந்தகாரங்கள்மூட
கருணைசேர்கிருஷ்ணதேவர் காண்டீபவிசையனும்
தருணமாயெதிரிபோன சமையமும்பார்த்துமெள்ள
இரணமாய்ப்போனதென்று பெருகதுகண்முழித்திட்டாரே.

வசனம்.

தாமரைத்துவசராசன் ரணக்களத்தைவிட்டு பட்டணம்போய்ச் சேர்ந்தவுடனே சாயங்காலமானதும சூரியன் மறைந்துபோக அந்தகாரமான யிருளானது மூடிக்கொள்ள ராத்திரிகாலத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவரும் அர்ச்சுனராசனும பெதிரி போய்விட்டானென்று இருவரும கண்முழித்தார்களய்யா சுவாமி.

அர்ச்சுனன்சொல் கவி.

எழுந்துபேபாழுதியெல்லாம் யிருவருந்துடைத்துக்கொண்டு
அழிந்ததுசேனையென்றும அனைவருங்காணோமென்று
இழிந்திடப்பரியும்போக யாகமுமுடியாதிப்போ
ஒழிந்திடக்காலமாக ஓடம்பெல்லாம்நோகுதையோ.

வசனம்.

இருவரும்யெழுந்திருந்து ஒருவருக்கொருவர் சரீரத்தில் படிந்திருந்த புழுதியெல்லாம துடைத்துக் கொண்டு சேனைகள் ஒருவரையுங் காணோமென்று அஸ்வமேதக்குதிரை போனபோதே யாகம் நிரைவேற மாட்டாது நமக்குயிந்த போற்கோலம் நேரிட்டதுயென் தேகமெங்கும நோகிறது நான்யென்னசெய்வேன் சுவாமி கிருஷ்ண மூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

பாரதயுயித்தியத்தில் பாணங்கள்பட்டதுண்டு
நேரகாயனைகபசண்டை நெரியுடன்செய்திருந்தும்
கோரமாயிவன்பாணத்தால் கொடுமையாய்வலிக்குதிப்போ
ஆருடன்சொல்லிநானும் ஆற்றுவேன்விசயபூபா.

வசனம்.

சேனும் அர்ச்சுனராசனே பதினெட்டுநாளாய் பாரதயுயித்தித்தில் யென்பேரில் அனேகம்பாணம்பட்டதுண்டு நானும் சண்டைசெய்திருக்குரேன் அப்போதெல்லாம் யிப்பேர்ப்பட்ட உபத்திரியமில்லை தாமரைத்துவசனுடைய பாணத்தினால் யென்தேகமெல்லாம் வலிக்கின்றது நான் ஆறுடன்சொல்லி யென்குரையை ஆத்தப்போகுரேன் மைத்துனனாகிய அர்ச்சுன மகாராசனே.

அர்ச்சுனன்சொல் கவி.

தேவாதிதேவனந்தா திரேகமும்பின்னஞ்செய்த
பாவியைக்கொன்றுநானும் பரியையுமமீட்டுவாரேன்
மேவியநகரங்காட்டி விந்தைசாதியம்செய்தால்
ஆலவாய்ச்சீக்கிரத்தில் ஆண்மையைக்காட்டுவேனே.

வசனம்.

அகோ வாருமையா சுவாமி நம்முடைய கிரேகம் கோகும்படி செய்சதுஷ்டனைக் கொன்று அஸ்வமேசக் குதிரையையும் பிடித்துக் கொண்டு வருகிறேன் யென்னுடைய ரதத்தின் தேர்ச்சட்டிலிருந்து சாரத்தியம் செய்து ரதகினபுரத்தையுங் காண்பித்தால் யிதோ யென்னுடைய பறாக்கிரமத்தையும் காட்டுகிறேன் பாருமையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி

சங்கரனயன்மால்தேவர் தாமரைத்துவசன்மீதில்
பொங்கியேயெதிர்த்திட்டாலும் போர்செய்யமுடியாதப்பா
சங்கையில்லாமல்வேத தபசிசன்னுசிஷேன்
அங்கயேயிருவர்போனால் அரியலாம்மகிமைதானே.

வசனம்.

அகோ வாரும் அர்ச்சுனா அந்ததாமரைத்துவசன் பேரில் பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன், யிந்தமூன்றுபேரும் சேனைசமுத்திரத்துடனேவந்து உயித்தியம்செய்தாலும் அவனைச்செயிக்க ஒருவராலுமுடியாது அவனோ விஷ்ணு பக்தன சத்தியசந்தனன் அப்பேர்ப்பட்டவனுகையால் அவனிடம உயித்தியம்செய்வது சரியல்ல அதற்கு ஒரு யோசனை யிருக்கின்றது நான் ஒரு தபசி சன்னியாசியைப்போலும் நீர் ஒரு சிஷனைப்போலும் மாறுவேஷங்கொண்டு அந்தப்பட்டணம் போனால் அவன் மகிமையை அரிந்துவரலாம் அர்ச்சுனமகாராசனே.

அர்ச்சுனன் வசனம்.

ஆனால் அப்படியேபோய்வருவோம் சுவாமி கிருஷ்ணமூர்த்தியே

பொது விருத்தம்.

இநகாதில்குண்டலமுந் தெண்டும்வேதம்
யிசைந்தகுல்லாமெரியடியும புலித்தோல்பூண்டு
பெருமையுடன்களபசெந்தம் நார்மடியுங்காவி
பிருமணசன்னியாசியைப்போல் கிருஷ்ணதேவர்
அருளாலே அர்ச்சுனனும் சிஷிபனாகி
அரிகிருஷ்ணகோவிந்தா வென்றுசொல்லி

வணையால் அவனிடம் உயித்தியம் செய்வது சரியல்ல அதற்கு ஒரு யோசனை யிருக்கின்றது நான் ஒரு தபசி சன்னியாசியைப்போலும் நீர் ஒரு சிஷனைப்போலும் மாருவேஷங் கொண்டு அந்தப்பட்டணம் போனல் அவன் மகிமையை அரிந்து வரலாம் அர்ச்சுனமகாராசனே

அர்ச்சுனன் வசனம்.

ஆனல் அப்படியே போய்வருவோம் வாருமையா சுவாமி கிருஷ்ணமூர்த்தியே.

பொது விருத்தம்.

இருகாதில்குண்டலமுந் தெண்டுப்வேதம்
    யிசைதகுலலாமெரியமயும புலித்தோல்பூண்டு
பெருமையுடன்களா செந்தம ஞர்மடியுங்காவி
    பிராமணசன்னியாசியைப்போல் கிருஷ்ணதேவர்
அருளாலே அர்ச்சுனனும் சிஷியனகி
    அரிகிருஷ்ணகோவிந்தா வென்றுசொல்லி
திருயேவுர்ரத்தின முளப்புகுந்து
    தெருவீதியிருவருமே வருகின்றரே.

வசனம்.

அகோ தெப்படியென்றல் ஸ்ரீகிருஷ்ணதேவர் பிராமண சன்னியாசியாக வேஷம்பூண்டு காதில் கனக குண்டலமுங் கையில் யோக தெண்டும் வேதசாஸ்திரமும் புலித்தோலாசனமும் கோபிசந்தனமும் அரையிலே ஞர்மடியும் மேலே காவிவேஷ்டியும் சிரசில் குல்லாவும் அணிந்துக் கொண்டு அர்ச்சுனராசன் சீஷனகவும் வேஷங்கொண்டு ரத்தின புரத்து தெருவீதியில வருகிற விதங்காண்க.

பிராமணர்வருகிர சுவி.

மெச்சியேகிருஷ்ணதேவர் மேன்மைசன்னசியாகி
அர்ச்சுனன்சிஷியனகி அரிகரிமுகுந்தாவென்று
இச்சையாயிருவர்கூடி இராத்திரிகாலம்வீதி
நச்சரவணைமேலநின்ற நாரணன்வருகின்றரே.

பிராமணன் தரு.

பிராமணசன்னியாசி — வந்தனர்
சதுர்வேதபாராயண — யோகசன்னியாசி

பிராமணசன்னியாசி வந்தனர்
சராசரமெங்குமே சத்தியகாரணன்
நிராமயமாகநின்ற நித்தியபரிபூரணன்-சரு
நிமலன்நிஷ்கள நித்தியசோதி
அமலனனவர் அரிநமோ ஆதி (பிராம)

முன்னாளிலராவணன் கும்பகர்ணனுங்கூட
மூலபலமெல்லாம் அழித்தவர்
மூவடிமண்கேட்டு மாபலியைச்சிரசில்
மோசமாயரக்கனைக் கிழித்தவர்.
அன்னாளில்துவாரகை யாதவஸ்ரீகளை-சரு
யேளிதங்களைச் செய்துபழித்தவர்
யிணையடிபோற்றினல் அருளளிப்பவர் (பிராம)

அஞ்சலிசெய்கின்ற துரோபதைக்கபிமானம்
அன்பினல்தந்து ரக்ஷித்தோம
அரக்கன்யிரணியனை கொல்லநரசிம்பமாய்
அவனுதிரத்தைப் பக்ஷித்தோம்
வஞ்சகனுகிய அம்மான் கம்சனைக்கொல்ல
வல்லமையாலே கெர்ச்சித்தோம்
மடுவில்கஜேந்திரனை முதலைப்பிடித்துக்கொள்ள
வந்துகார்த்திடவும் யிச்சித்தோம்-சரு
மாதவமுராரி வைகுந்தன்
யாதவகுலத்தில் அசோதையின்மைந்தன் (பிரா)

சூதுவேஷத்தினலே யாகக்குதிரைதன்னை
துரிதமுடனேனனும் விடுப்பேன்
சொல்லக்கேளாதாமரைத் துவசனைவஞ்சத்தால்
சோதனைசெய்துமே கெடுப்பேன்
வேதாகமத்தின்படி தர்மர்செய்யுமயாகத்தை
விக்கினஞ்செய்தபேரை அக்கிஷத்தைக்கெடுத்து
வெஞ்சமரினில் தடுப்பேன்-சரு
விண்ணவர்பூமலர் நின்றுமேதூத்தவும்
அண்ணசாமிக்கவி ருசனும்போறநலே (பிராம)

பிராமணன் கவி.

அன்னுடாசீஷாயிங்கே ஆசாருயருகில்நில்லும்
பொன்மதில்கோபுரங்கள் பூசிக்குமாலையங்கள்
நன்னெறிவேதகோஷ்டம் ரத்தினபுரத்தின்வீதி
சொர்னமாய்க்கடைகள்விக்கும் சொகுசைநீபார்த்திடாயே.

வசனம்.

அடா ஸ்ரீகாமசீஷா நம்மிடத்திலேதானே ஆசருகநில்லும் யிந்த றத்தினபுரத்து சிவாலயம், விஷ்ணுவாலயம் சொர்ணமயமான மதில் கோபுரங்களும் யென்னேரமும் வேதகோஷ்டமும மேளவாத்தியங்களும் காது செவிடுபட்டுப் போகின்றது அதுவுமல்லாமல கடைத்தெருவின் வீதியினுடைய அலங்காரங்களும் பாரும் பிள்ளாய் சீஷனே அந்தச்சமயத்தில் கடைவீதியில் புஷ்ப்பம் விற்கின்ற பூவாண்டிச்சிப் பெண்வருகிற விதங்காண்க.

பூவாண்டிச்சிவருகிர கவி.

பலர்கடைவீதிதோறும் பார்த்துமேவருகுப்போது
மலர்முல்லைசெண்பகப்பூ மவுனசாமந்திவிற்கும்
முலைமலைப்போல்பரந்த முகமதிலபணிகள்பூண்டு
கலைதனையுடுத்திக்கொண்டு காரிழைவருகின்றாளே.

பூவாண்டிச்சிவருகிர தரு.

மல்லிகைமுல்லையிரு வாகூஷிசெண்பகமலர்
மாலைகள்விற்கின்றபெண் வந்தனளே

சொல்லுங்கிளிமொழி தோகைசாயல்நடையும
மெல்லியிடைதுவள மேனிப்பளபளென்ன-சுரு

விச்சித்திரபரிமளவாடை வீசவும்முகமதி
வேல்விழியாகக் கண்கூசவும் (மல்

மல்லிகைமுல்லை மருவும்சாமந்திகொன்றை
மாலைகள்கையிற் பிடித்து
மலர்சிலபுஷ்பந்தன்னை மாலையாகத்தொடுத்து
அருமையாகவர்ன சரந்தனைமடித்து
அன்னநடைபோல் அரும்புகளையெடுத்து-சுரு

அதிவிதசுகுந்த கதம்பமுஞ்சேர்க்கவும்
பதிவளர்சேனைகள் வந்துபாற்கவும் (மல்)

மாலைக்கிரணடுபொன் வாங்கிமுடித்துக்கொண்டு
மாதர்தெருவில்வந்தால் மாது அருகில்னின்று
சாலஞ்செய்பவளேனும் சாதனமாய்க்கொண்டு
தையலர்பூசிக்க வேணுமேதினங்கொண்டு-சுரு

சரசவிகசித புருஷனைக்கூடாமல்
அரசர்மகிழ சங்கீதமும்பாடவும் (மல்)

புருஷர்களேநீங்கள் புதுமலரிந்தமாலை
பொன்றெண்டுதந்துமே வாங்கிக்கொள்ளிந்தமாலை
மருவும்மார்பிலணிந்தால் மாயகிருஷ்னன்போலே
மனையாளுன்னிடம்வந்து வணங்குவாளிந்தவேளை-சுரு

மாதர்களேபெண்கள் வாங்கிமுடிக்கவும்
காதலானவர்கள் கண்டுதுடிக்கவும் (மல்)

பொது வசனம்

அகோ இதப்படியென்றால் பூவாண்டிச்சிப் பெண்ணானவள் புஷ்பம் விற்கும்போது ஒரு புருஷனானவன் வந்து புஷ்பமாலையை விலை கேழ்க்குற விதங்காண்க.

பொது கவி.

மாதவன்மார்பில்மேவும் மகாலக்ஷிமியைப்போலும்
காதலாய்புஷ்பம்விற்கும் கன்னிகையிந்தமாலை

யேதுதான்விலையைச்சொல்லி யெந்தனுக்களித்தாயானல்
ஆதரவாகவிப்போ அணிந்துநானகொள்ளுவேனே.

வசனம்.

ஸ்ரீமகா விஷ்ணுவினுடைய மார்பிலேவிளங்கா நின்ற மகாலக்ஷி மியைப்போலும் யிராநின்ற பெண்மணி இந்த மாலையினுடைய விலையைச்சொல்லி யெனக்குக்கொடுத்தாயானல் யென் மார்பிலே அணிந்துக்கொள்வேன் பெண்ணே பூவாண்டிச்சியே.

பூவாண்டிச்சிசொல் கவி.

யிந்ததோர்மாலைதன்னை யிறண்டுபொன்கொடுத்துவாங்கி
உந்தன்தன்மார்பில்பூண்டால் ஒருவருமொப்பில்லாத
நந்தகோபாலகிருஷ்ணன நாராயணன்போலேயாகும்
வந்துமேமனமகிழ்ந்து வாங்கிநீர்கொள்ளுவீரே.

வசனம்.

அகோ கேளும் புஷ்ப்பரத்தினமே யிந்த வாசமுள்ள புஷ்பமாலையை இரண்டுபொன் கொடுத்து வாங்கி உம்மிட மார்பிலணிந்துக் கொள்வீரானல் ஸ்ரீகிருஷ்ண நாராயண மூர்த்தியைப்போலேயிருக்குமையா சுவாமி.

கிருஷ்ணமூர்த்தி சன்னியாசி சொல்கவி.

தெருவீதிகடைகள்தோறும் சீஷனேசொல்லக்கேளாய்
அரியதுவிளங்கிமேலாய் அச்சுதன்பாதந்தன்னை
மாறவியேதுதிக்கும்வார்த்தை மகிக்ஷியிப்படியிருக்க
திருவளரரசன்வார்த்தை செப்பவும்யென்னலாமோ.

வசனம்.

அகோ கேளும் ஸ்ரீசாமிசீஷா தெருவீதிகள் தோறும் கடைவீதிகள்தோறும் விற்கல் விலைகொள்ளல் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளிலே யிந்தப்பட்டணத்து செனங்கள் ஸ்ரீமகாவிஷ்ணுவை யென்னேரமும் துதிக்கின்ற வார்த்தையை செவிகொடுத்துக் கேளும்பிள்ளாய் சீஷனே இந்த நகரத்து ராசனுடைய மகிமை யெப்படியிருக்கின்றது பாரும் சீஷனே.

பொதுகவி.

தேவசன்னசிசீஷன் சிலதூரம்போகும்போது
மேவியமேடைமெத்தை விசாலமாய்ப்புருஷன்தேவி

ஆவலாய்மோகாந்தகாரம் அன்பினால்ஸ்ரீயிருகம்
தாவியேபாடும்வேளை சன்னாசிகேட்டிருந்தார்.

வசனம்.

அப்புறம் சிலதூரம் சன்னாசியும் சிஷனும் போகும்போது ஒரு உப்பரிகை மேடையின்பேரில் ஸ்ரீயும் புருஷனும் கேளிவிலாசமாக பாடிக்கொண்டிருக்கிற விதங்காண்க.

(பட்டணத்தில் யிருக்கும் ஸ்திரீ புருஷன் தரு.

அண்ணலுக்கொப்பான ஆசைப்பிராணநாதனே
அச்சுதனருளினால் மெச்சியதமிழினால் (அண்)

புருஷன் தரு.

பெண்ணேநீபாடும்ராகம் யென்னையுருக்குதடி
பேரின்பமேமயிலே தாரார்குழற்குயிலே (பெண்)

பெண் தரு.

அமையும்ராகத்தினாலே ஆதிமூலத்தைப்போற்றி
திருவும்மாலுமபுகழ்ந்து மேவிவிளங்குகின்றார் (அமை)

பொது கவி.

நாற்றிசைபுகழ்படைத்த ராஜனைக்காணவேண்டி
பார்த்தவர்மதிமயங்க பிருமணன்சிஷனோடு
கீழ்த்திசையருணன்தானும் யிருளைமேமுறையமாக
பார்த்துமேஸ்தானபானம் பரன்பூசைமுடித்தாரென்றே.

பொது வசனம்.

இவ்விதமாக ராத்திரிகாலத்தில் யிருவரும் பட்டணத்தினுடைய சிங்காரங்களைப் பார்த்து சூரியனுதயமான வுடனே ஸ்தானமானம் பூசை முதலாகியதும் முடித்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் அர்ச்சுனராசனும் சன்னாசிவேடங்கொண்டு சன்னியாசியானவர் மயூரத்துவசனிடம வந்து சொல்லுகிற விதங்காண்க.

கிருஷ்ணசன்னாசி தரு.

ரத்தினபுரத்தையாளும் ராசபோசனே
நாற்றிசைபுகழ்மயூரத் துவசராசனே
வெத்தியாகதானதர்மம் விளங்கும்நேசனே

மேதினியரசர்கள்கொண் டாடும்வாசனே
நாயணம்குமனதர்பான சீலனேநாடும
நன்மொழிதவராபரி சுத்தலோலனே
பாயணம்வேதம்துதி பகரும்பாலனே
பகைத்தவர்களுக்கொரு பலத்தகாலனே
சுகிபவாசுகிபவா சூரதெய்பீர
சுத்தபவுத்திரமான ஞானவுதாரா
உன்மகிமையையாரறிவார் மகாபெலதீர
மகாலக்ஷிமியீன்ற மைந்தனேமாரு
ஆசீர்வாதங்கள்செய்தேன் அரசர்கள்கோலே
அஸ்வயாகத்தைச்செய்யும் அதிபெலதீர
மாசில்லாதயோகமாக வாழுந்தீரனே
வந்தகாரியத்தை மகிழ்ந்துநீதாவே (ரத்தி)

பயூரத்துவசன்சொல் கவி.

அரண்மனைவாசல்காக்கும் அதிபெலசேர்வைக்காரு
பிர்ம்மசன்னுசியார்க்கு பொற்பீடந்தனையளித்து
கர்மங்கள்போக்கவேண்டி கடவுளும்வந்தாரிப்போ
நறுமலர்க்கொன்றைதும்பை நயந்துமேகொண்டுவாராய்.

வசனம்

அகோ வாரும் பிள்ளாய்க் கட்டியக்காரு மகாபெரியோரான பிருமண சன்னியாசியாருக்கு பொற்ப்பீடம் போட்டுவையும் அவரை நாம் பூசிக்கவேண்டும் மல்லிகை, முல்லை, பிருவாக்ஷி பலவிதவாசனை யுள்ள புட்பங்களைக் கொண்டுவாரும் பிள்ளாய் கட்டியக்காரு.

பயூரத்துவசன்சொல் கவி.

அரண்மனைதேடிவந்த ஆதிசன்னுசியாரே
சருணம்நான்செய்யாமுன்னே சுவாமிநீவாழ்த்தலாமோ
விரைவுடனெனக்காகத்தான் வேண்டும்காரியத்தைப்பற்றி
குரைவிலாவாழ்த்தினேன்யான் குத்தங்களைதாதானையா.

வசனம்.

அகோவாரும் பிராமணசன்னியாசியாரேநான்சருணம்செய்யாத முன்னமே நீர் ஆசீர்வாதம் செய்யலாமோ சொல்லும் சுவாமி.

பிருமணன் வசனம்.

அகோ கேளும மயூரத்துவசருசனே யெனக்கு உமமாலே ஒரு காரியமாகவேண்டிய தைப்பத்தி ஞன் முன்னமே ஆசீர்வாதம் செய்தேன் அதினுலே உனக்கு ஒருகுறைவுமில்லை மகாராசனே.

மயூரத்துவசன்சொல் கவி.

வேண்டியபொருளைத்தந்து மேன்மையும்பெருவேனிப்போ
ஆண்டவர்போலேவந்த அவரைபூசிக்கவேண்டும
தூண்டியேகெங்காதீர்த்தம் துளபமுமழைப்பீரிப்போ
வூன்றியேபூசைநானும வுரித்தியாய்ப்பூசிப்பேனே.

வசனம்.

கேளுமையா சுவாமிநீர் வேண்டிவந்த காரியத்தை இன்னதென்று சொன்னதேயாமாகில் தடையில்லாமல் தருகுரேனையா சுவாமி

சன்னுசிசொல் கவி.

தருகுரேனென்றவார்த்தை சத்தியம்தப்பப்போருய்
அருணனுமதியுஞ்சாக்ஷி ஆகாயப்பூமிசாக்ஷி
பெருமைபாம்சபையோர்சாக்ஷி பித்தனுமரியுஞ்சாக்ஷி
இருமனதாகநீதான் யெண்ணஞ்செய்யாதேமன்னா.

வசனம்.

கேளும் மகாருசனே நீர் வேண்டிவந்த பொருளைத்தருகிறேனென்றும்சொன்ன வார்த்தையைப்பற்றி சத்தியஞ்சவரப் போருய் நீர் சொல்லிய வார்த்தைக்கு சந்திர சூரியாள் சாக்ஷி ஆகாயம் பூமிசாக்ஷி மும்மூர்த்தி தேவர்களும் சாக்ஷி இந்தசபையோரும சாட்சி நீசொன்னவார்த்தையை மரந்து இருமனதாகப் பேசப்போகுரீர்மகாராசனே

வசனம்.

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா கங்காதீர்த்தம், துளசி முதலானதுங் கொண்டுவந்து சன்னியாசி பெரியவருக்கு பூசை செய்யவேண்டும் அதிக சீக்கிரமாகக் கொண்டுவாரும் கட்டியக்காரு.

மயூரத்துவசன் தரு.

தேவசன்னுசியாற்கு	திருவடிபூசைசெய்தேன்
பாவம்விட்டகன்ருேட்	பாதந்துலக்கிவிட்டேன் - சுரு

பரிமளகந்த கதம்பமணிந்து
கரிதனைக்காத்தவ ரென்றுநினைந்து (தேவ)

தும்பைவிளம்பம்கொன்றை சுவாமிக்கர்ச்சனைசெய்தேன்
இன்பமய்தூபதீபம் யெடுத்துகரம்குவித்தேன்-சரு

இருகரமங்களை சிரசினில்கொண்டு
ஒருபொருளாய்வந்த திருவுருவென்று (தேவ)

அய்யனைவலமாக் அச்சுதனென்றெண்ணி
மெய்யாசருணம்செய்தேன் மிகவும்நான்தொண்டுபண்ணி-சரு

வினையகன்றிட யருள்புரிவது
நிசமேயுனையடிமைக் கொள்வதுவசமே (தேவ)

பரமாநந்தசொரூபா பக்தவச்சலதேவா
திரமாயெனையாண்டுகொள் செங்கண்மாலேமூவா, சரு

தேவகிநந்த கோபாலசிங்காரா
தாவியேஅடியார்க்கு தயவருள்பாருய் (தேவ)

மயூரத்துவசன்சொல் கவி.

சிந்தைபோரன்புகொண்டு திருவடிபூசைசெய்தேன்
யெந்தவூரெந்ததேசம் நின்பெயர்தன்னைக்கூறி
வந்தகாரியத்தைச்சொல்லி வனுக்கிரகம்செய்தீரானல்
தந்திடக்காத்திருப்பேன் தயாபரா அருள்செய்வீரே.

வசனம்.

சருணம் சருணமையா சுவாமி யெந்ததேசத்தி லிருந்து வந்தீர்கள் உங்களுடைய நாமதேயமென்ன சீஷன் பெயரென்ன நீர் வந்த காரியத்தையும் சொன்னல் தருகுரேனையா சுவாமி பிராமணசன்னசியே.

சன்னசிசொல் தரு.

எங்களூரெங்கதேசம் யென்றென்னைக்கேழ்க்கவாதீர்
யிவனுடனேஉரைப்பேன் ராசபூபனே
உந்தனைப்போல்விஸ்வாசக் காரரைஞனறியேன்
உண்மையைச்சொல்லுவேன் பிரதாபா
தர்மபுரமென்றும்பேர் குடியிருப்போமதில்

சாதிபிராமணக்குல தபயோகி
வர்ம்மமில்லாதகிருஷ்ண னென்பார்கள்
வார்த்தைதவராயென்பேர் கிருஷ்ணாச்சாரி
தபத்தினாலவந்தவொரு பிள்ளையுண்டுயெனக்கு
தாஷ்டீகமாய்மூவரு யிங்கேநாடி
அபக்தமாய்சொல்குரே னென்றெண்ணதே-யிப்போ
அரசனேயுமயிட நகர்தேடி
அரிவாசுதேவ சாஸ்திரியைபெண்கேழ்க்க
அழைத்துவந்தேன் பிள்ளையைஙெதாரம்
பரியானகாட்டிலொரு சிங்கம்கொர்ச்சித்துவந்து
இருவரைவிட்டுயிங்கே யின்னேரம்
பிள்ளைதனைப்பிடித்துக் கொள்ளுகையில்நான்
பதரியேசிங்கத்தை வேண்டிக்கொள்ள
இரைவேரேதாரேனென்று தானங்கொடுக்கவே
யென்சுதனைவிடுமென்று வேண்டும்போது சிங்கம்
வேரேமாமிசங்கள் வேண்டாமென்று சொல்ல
வினவியுரைத்தமொழி யென்னசொல்வேன்
ஆண்டரத்தினபுரத்துங் கரசன்மயூரத்துவசன்
அவரைபருத்துபாதி தருகவென்று
கேட்டபடிக்குடுத்தால் சதனேவிடுவேனென்று
கேழ்க்கதருவேனென்று யிங்குவந்தேன்
நாட்டப்படிக்கிமகா ராசன்கொடுப்பீரென்று
நமது ஆசீர்வாதம் முன்னேசெய்தேன்

பிராமணசன்னசிசொல் கவி

மீட்டந்தசுதனைத்தந்தால் நீடூழிகாலமெல்லாம்
தேட்டமாய்விளங்குமுன்பேர் செழித்தநல்லரசர்கோவே.

வசனம்.

சேளும் மகாராசனே னான்கேட்டதை தருவேனென்று சொன்னபடியால் யென்னுடைய விர்த்தாந்தமெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னேன் சிங்கத்தின் கையில் அகப்பட்டயென் பிள்ளையை மீட்டுக்கொடுத்தால் பூமியுள்ளளவைக்கும் உன்பேர் விளங்கும்மகாராசனே

மயூரத்துவசன்சொல் கவி.

அரியதோர் தவங்கள்செய்யும் அந்தணசன்னியாசியாரே
சிரியதோர்தானங்கேட்டீர் சிவனுமங்கிலையதாமோ
கரியமால்பிரிதியாக சண்டித்துதிரேகந்தன்னை
பெரியசிங்கத்துக்கீய்ந்து பிள்ளையைவிடுவிப்போமே.

வசனம்.

அகோ வாருமையா பிராமணசன்னுசியாரே அர்ப்பமான சிரிய தானங் கேட்டீர் யிந்தசிவன் நிலையாக நிற்குமோ விஷ்ணுபிரிதியாக யென்னுடைய திரேகத்தைக் கண்டித்து தருகுரேன் சிங்கரசனுக்கு கொடுத்து உன்பிள்ளையை மீட்டுக்கொள்ளுமையா சுவாமி.

மயூரத்துவசன்சொல் கவி.

மந்திரிகேளாயிப்போ மகன்தனையழைத்துவாரும்
முந்தியேபட்டங்கட்டி முறைதவராமல்செய்து
அந்தநோர்தேவருக்கு அர்ப்புதமாகத்தானே
இந்தநோர்திரேகந்தன்னை யிகழ்ந்திடச்செய்குவேனே.

வசனம்,

கேளும் நகுலத்துவசமந்திரி நம்மிடகுமாரன் தாமரைத்துவசனுக்கு ரத்தினபுரத்தைப் பட்டங்கட்டி யிந்த திரேகத்தை விஷ்ணுபிரிதியாக அறுத்து அந்தணருக்குத் தந்து அவருடைய பிள்ளையை மீட்டுக் கொடுக்கவேண்டுமென யென்மைந்தனாகிய தாமரைத்துவசனை வரச்செய்யும் மந்திரி அப்போது தாமரைத்துவசன் தந்தையைப்பணிந்துசொல்லுகிற விதங்காண்க.

தாமரைத்துவசன்சொல் விருத்தம்

தக்ஷணமேதாமரைத் துவசன்வந்து
தந்தையடிபணிந்து யிவ்வாறுகேட்டு
இஷ்டமுடன்வேத சன்னியாசியார்க்கு
பரிவுகூர்ந்தடிபணிந்து பரமேயென்று
இக்ஷணமேயென் திரேகம் அறுத்துபாதி
யின்பமுடன்தருகுரேன் வாங்கிக்கொண்டு
கிக்ஷபமாய் தந்தையின்மேல்கிருபைசெய்து
நீக்குவீரென்னுயிரைப் போக்குவீரே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் தாமரைத்துவசன் வந்து தகப்பனைப் பணிந்து நடந்த சங்கதிகளையறிந்து சன்னாசியாரைப் பணிந்து சுவாமி பிந்தக்ஷணம் "யென்திரேகத்தைப் பாதியாக அறுத்து தருகுறேன் வாங்கிக்கொண்டுயென் தந்தையின்மேல் கிருபைசெய்யுமையா சுவாமி சன்னாசியாரே.

தாமரைத்துவசன் தரு.

வேதசன்னாசிவுருவமாகவந்த விமலனாதனே
மேவுந்தந்தையைவிட்டுவிடுவீர் ஞானபோதனே
ஆதிமூலப்பொருளாகிவேவந்த ஆலசாலனே
அடியென்மீதில்கிருபைவைத்தருள் ஞானசீலனே
சிங்கராசனுக்கிரையதாகவே சிந்தைவையாதே
திருவடியைசென்னிமேல்கொண்டேன் தேவனேமெய்யா
மங்களகரமாய்ப்பாதிசரீரத்தை அறுத்துநான்தாரேன்
வைகுந்தமேவியயானுக்கடியனாய் வருந்திநான்போரேன்
யென்னுடலசிங்கத்துக்கிரையாகத்தந்து யீசனேசனே
இப்போதுன்பிள்ளையைமீட்டுக்கொள்ளுவீர்யிருடிகேசனே
அன்னையுந்தந்தையுமனதுக்கொப்பாக அன்பாய்க்கொள்ளுவீர்
அமலனாதனேவிமலபோதனே அருள்விள்ளுவீர்

பிராமணசன்னாசிசொல்கவி.

காட்டினிற்சிங்கராசன் கருத்தைநீகேளுமைந்தா
வட்டமதாகச்செங்கோல் அரசுதான்முடிதரித்து
தேட்டமாயறுத்துவாங்கி திண்ணவேகேழ்க்கும்போது
கேட்டதைதாரேனென்று கெட்டியாய்சொல்லினேனே.

வசனம்.

கேளுமப்பா தாமரைத்துவசனே காட்டிலேயிருக்கப்பட்ட சிங்கமானது சொன்னவார்த்தையைக் கேளும் முடிதரித்து இந்தரத்தினபுரத்தை யாளாநின்ற அரசனுடைய சரீரத்தை அறுத்துவாங்கிவந்து கொடுத்தால் சாப்பிடுகிறேனென்று சொல்ல நான் கெட்டியாய்த் தருகிறேனென்று சொல்லி வந்திருக்குறேன் உன்திரேகத்தைக் கொண்டு போனால் வேண்டாமென்று சொல்லுமப்பா தாமரைத்துவசனே.

தாமரைத்துவசன்சொல் கொச்சகம்.

பிதிருவுக்குவந்தயிடர் பிள்ளையிருந்துதீர்க்காமல்
கெதிக்கியனுகூலமில்லா கேவலமாய்ப்போனேனையோ
விதித்தபடியுன்செயலோ மேகநிரமேனியனே
சதிக்கிநான்யென்னசெய்வேன் தற்பரனேகேசவனே.

தாமரைத்துவசன் தரு,

கோவிந்தாகோவிந்தா அரி கோபிகாரமணா
மாவிந்தத்துளபமணி மாயவாகேசவனே
வைகுந்தந்தன்னைவிட்டு வருவாய்பாசனே-சுரு
மாதவகேசவ யாதவமுகுந்தா
சீதரவாமனே ஸ்ரீஅரிநந்தா (கோவி)

தந்தைக்குஉதவியில்லாப் பிள்ளையாகவும்
தாளிணையைத்துதியாத கள்ளனாகவும்
தொந்தத்திலகப்பட்டு தூரப்போகவும்-சுரு
சுந்திரமாது விளங்கியதீரா
விந்தையாய்கூர்ம வருகவதாரா (கோவி)

பெரியோரைமதியாமல் இருந்தேனேபிச்சை
அன்னங்கொடாம லடித்துவைத்தேனே
சிரியோர்துஷ்டர்க்கிடங் கொடுத்தேனேசெய
தபமில்லாமல்தினம் பாவம்செய்தேனே-சுரு
செங்கருடன்மேல் யிரங்கியேவருவாய்
மங்களகரனே வரமதுதருவாய் (கோவி)

நரசிம்மரூபா அரிநமோ நாராயணா
நந்தகோபாலர்வீட்டில வந்தபூரணா
கரமதில்சங்குசக்கர மானகாரணா
காளிங்கனிற்தனஞ்செய்த ஆதிநாரணா-சுரு
காமனையருளிய கற்பகத்தருவே
மாமனைவதைத்த மனமதுவரவே (கோவு)

பொது வசனம்.

தாமரைத்துவசன் யென்னசொல்லியும் சன்னியாசி ஒப்பாதிரு

க்க மயூரத்துவசராசனுடைய தேவியாகிய குமுத்துவதி யம்மனானவள் பிராமண சன்னியாசியை நோக்கிச் சொல்லுகிறவிதங் காண்க,

குமுத்துவதிசொல் கவி.

தாமரைத்துவசன் கூற சன்னியாசியொப்பாதிருக்க
நேமமாயரசனுக்கு நேரிழைகுமுத்தமாது
கோமானைக்கொடுத்துவிட்டு குமரிநானிருக்கப்போமோ
காமனையளித்தநாதா கருத்தின்படிசெய்வாயே.

வசனம்

ஸ்ரீமன்னாராயணா நான் அரசனை யிழந்து பூமியிலிருக்கலாகுமா யென்னை அறுத்து வாங்கிக்கொண்டு போகும்படி பெரியவர் மனதை சரிப்படுத்த வேண்டும் கற்தீபமே.

குமுத்துவதிசொல் தரு.

சரணம்சரணமையா பெரியசன்னாசியாரே
தயவாநல் புரியு மையா
கருணைமுன் திருவடி தந்துரக்ஷிக்கவேணும்
சாத்துவன்கேளு மையா-சரு
தாவியேசிங்கத்துக் காகவேயிரையாக
தக்ஷணம்யென்னையே பக்ஷணமாக்குவீர் (சரு)

பிராமணசன்னாசி தரு.

அம்மாநீவாழிவாழி அரசுசெங்கோலும்வாழி
சுமோனான் வருவேனே சொல்லுவேன்கேளுமம்மா-சரு
தோதகமாகவே கானகந்தன்னிலே
துள்ளியசிங்கமும் பிள்ளையுமெங்கே (அம்)

குமுத்துவதி தரு

யென்னசொல்லுமையா யென்பிராணநாதனை
யெதக்கமாய்வி...விடச் சொன்னேன்
சொல்தவராமலே யென்னைப்பலிகொள்ளும்
சிங்கத்துக்கு யிரையாக-சரு
விடுவாய்துய்யனே கடவுளாகவந்த
சுந்தரனேசா மூந்தியவாசா (யென்)

பிருமணசன்ஞசி தரு.

உத்தமியேயென்வார்த்தை உரைக்குரேன்கேளுமயி
ஒருகுறையிலானும் ராசனே
பத்திசரீரத்தை பாதிவலபக்கமாக
பகர்ந்துதருவாயென்று நேசனே-தரு

பதரியேசிங்கம் கேட்டதும்மெய்யே
பத்தினியாளே நத்திலேனினியே (உத்)

குமுத்துவதி தரு.

சிங்கராசனிடம்நான் வருவேன்சுவாமி
சிந்தைக்குளிரவையும் குருநாதா
அங்கத்துக்காசைவையேன் ஆண்டவர்க்குச்சரியாய்
அருள்தந்தாலும் மெஞ்ஞானபோதனே-தரு

அண்டினபேனைக் காப்பதுன்கடனே
அஷ்டமாயோகி கிஷ்டைகளாகி (சிங்க)

பிராமணசன்ஞசி தரு.

புருஷரிடப்பாகம் பெண்பாலாயிருக்கும்
பிசகாமல்வலப்பக்கம் தாருமென்று
மிருகமானசிங்கமென்னை கேட்டதுமெய்யம்மா
வேண்டியரசனிடம் வந்தேனின்று-தரு

மெத்தவும்வாடின பத்தினிமாதே
மெல்லியேகனமே சொல்வதுயினமே (புரு)

குமுத்துவதிசொல் கொச்சகம்.

சன்ஞசியற்குமனம் சந்தோஷமாயவற்கும்
யென்னைச்சிங்கராசனுக்கு இரைகொடுக்கவேணுமென்று
கன்னியும்நான்தோத்தரித்தேன் கருணைசெய்யவாருமையா
மன்னன்பிழைக்கச்செய்வாய் மாதவனேகேசவனே.

வசனம்

அரிகரி நமோநாராயண சிங்கராசனுக்கு யென்னை யிரையாகும்படி பெரியவர்மனத்தை சந்தோஷப்படுத்துமையா சுவாமி.

குமுத்துவதி தரு.

அரிமுகுந்தனே திருவைகுந்தனே
அடியேன்பாவியோ கொடியகோபியோ
கரியைரட்சித்த கமலபாதனே
கணவனபோகவும் துணையில்லாமலே
காளைநானுமே கதரியழுகவும்
கண்டுவுன்பதம தெண்டம்செய்தனே
வனத்துசிங்கமும் யென்னைவாரியுண்ணவும்
வருளுமையனே தருணமையனே
கனத்தராசனும் நினைத்துபூமியில்
கதித்திருக்கவோ பதித்திருக்கவோ
பிராமணசன்யாசி பெரியவர்மனது
பிழைவராமலே வழுவில்லாமலே
கர்ம்மபூமியில் உழன்றிடாமலே
காட்சிதாருமே மோக்ஷம்சேரவே
பரமகேசவா பக்தவச்சலா
பாரும்பாருமே கிருபைதாரும்தாருமே
முராஹரிமுகுந்தா மூவடியளந்தாய்
மூலகாரணா ஞானபூரணா (அரி)

பிராமணர் கவி.

சிங்கமும்சொன்னவார்த்தை தெரியவேவுரைப்பேன்கேளும்
இங்குபெண்சாதிப்பிள்ளை யிருபக்கமமனங்களிக்க
தங்காமல்வாளைநாட்டி சஞ்சலமிலாமல்தந்தால்
பொங்கமாய்க்கொள்வேனென்று புகழ்ந்திடவுரைத்ததன்றே

வசனம்.

கேளுமம்மா குமுத்துவதி சிங்கராசன் சொன்னவார்த்தையைக் கேளும் பெண்சாதி பிள்ளை யிருவரும் சந்தோஷமாக வாளினால் அறுத்துக் கொடுக்கும்படி சொல்லியிருக்கின்ற தமமணி.

மயூரத்துவசன் கவி.

முனியவருரைத்தபோது மூபர்ந்தசிம்மாதனத்தில்
இனியதாமரைத்துவசன் யிருந்திட முடிகள்சூட்டி
மனவியும்மைந்தன் தன்னை மகிட்சியாயிருக்கச்சொல்லி
தன்முகங்கிழக்காய்க்கொண்டு சுவாமியைதுதிசெய்வாரே.

வசனம.

சன்முநிசொன்னவார்த்தையை ராசன்கேட்டு தாமரைத்துவச னுக்குப்பட்டாபிஷேகம் முதலானதுஞ்செய்து முடிசூட்டிபெண்சாதி பிள்ளையை சந்தோஷமாக யிருக்கச்சொல்லி மயூரத்துவசராசன் கிழக்குமுகமாக உட்சார்ந்துக்கொண்டு சுவாமியைத் துதிசெய்கிற விதங் காண்க.

மயூரத்துவசன் தரு.

அரிஓம்நமோ நாராயணா அனந்தசயனா
பரிபூரணவேதமெஞ்ஞான பரமானந்தனா-சரு
பலகலைவேத முடிவினின்றுநின்று
பாருமெய்யந்தனே காருமெசொந்தனே (அரி)

பக்தர்கள்சித்தர்கள்முத்தர்கள் வந்தாபணியும்பாதனே
பாரினில்ஓராமயளந்தமூர்த்தி பாருமவேதனே-சரு
நித்தியப்பொருளாய் நிர்ம்மலாகிறைந்த
நீதனேநீயென்னை ஆண்டின்றருள்வனே (அரி)

எல்லாவுபிநம்நீயேநின்றாய் யேகமூர்த்தியே
யெம்பெருமானேஉம்பர்கோமானே யென்னைப்பார்த்திடே-சரு
சொல்லாய்பொருளாய் கல்லாய்மரமாய்
துயரைத்தீர்ப்பாய் துவாரகைதன்னில்
மாயனாய்நின்று ஆயர்களோக்காத்தாய் (அரி)

அடியாருள்ளம்குடியாய்நின்ற ஆனந்தலோலனே
அண்ணாசுவாமிதாசன்மனதி லாடுஞ்சீலனே
கொடியபாவியானவற்கு கொடுமைகாலனே-சரு
குவலயந்தன்னில் கீர்த்திவிளங்கும்
கொண்டகோலமே தெண்டம்செய்தனே (அரி)

மயூரத்துவசன்சொல் கவி

இந்ததோர்சீவன்தானும் யினியொருபிறவிவந்தால்
விந்தையதாகச்செல்வம் மிகவுமேவளர்ந்தயேலாய்
உந்தனைத்துதிக்கநானும் முருதியேதருகவேணும்
சுந்திரமாதுமார்பா துலங்குமவைகுந்தமாலே.

வசனம்.

ஸ்ரீமந்நாராயணா, வைகுந்தவாசா, லக்ஷ்மிசமேதா யிந்த தேகம் அழிந்து சீவனானது யினியொருபிறவி பிறந்திருந்தால் செல்வம் பெருகி யீவ்வெதக்க முண்டாகவும் அதுதவிர வென்னேரமும் உனது திருவடியை தியானஞ்செய்து யென் இரேசமும் உமக்கு பிரதியாக வேண்டுமையா சுவாமி.

மயூரத்துவசன் தரு.

நாராயணாயென்றிரேகம் உனக்கேபிருதியென்று
ரட்சிக்கவேணும் தயாபராயென்னை
பக்ஷிக்கவேணும் பராபரமே
பாராயணாவேதப் பரமபுருஷோத்தமா
பக்த்தவச்சலதேவா பாக்கியதயாநிதி-சுரு
பதியருளே உன்கெதியருளே
மதியருளேயுன் விதியருளாலே (நாரா)

தீவினைசெய்தாநான் தீங்குகள்செய்தாலும்
தெரியாமல்பெரியோரை தீதாகவைதாலும்
பாவவிமோசனா பரந்தாமாமுரகரி-சுரு
பக்ஷித்தாக்ஷிக்க காத்தாயேகரி
படிதனில்முடிதனில் அடியனைசேர்ப்பிக்க (நாரா)

ராவணனைக்கண்டித்து விபூஷணனைக்காத்தாய்
ராக்ஷதகுலங்களை வேறறவேபார்த்தாய்
தாவும்பிரகலாதனன் சிரஞ்சீவியாகவே
சத்துருபிரணியனும் தான்குடிபோகவே-சுரு
தக்ஷணமேயென்னை பக்ஷணமே
அக்ஷடமேபதம் யிக்ஷணமேசேர (நாரா)

வாலியைக்கொன்றுமே சுக்ரீபனைரக்ஷித்தாய்
மானமாதுரோபதைக்கு மாளாத்துயிலளித்தாய்
காலனணுகிடாமல காத்துரக்ஷித்தருளே
கலியுகத்தரசனே காரணாரணப்பொருளே-சுரு
கரிவருதாயென்னை யருள்வரதாயினி
திரிபுரமெரித்தாயுன் வரமருள்தரவே (நாரா)



பொது விருத்தம்.

ஐம்புலனுமொன்றாகிக் கரங்குவித்து
யன்புடனே மயூரத்துவசராசன்
தன்மனைதநாரணரைத் தோத்தரித்து
தாமரைத்துவசனுங் குமுத்துவதேவி
இன்பமுடன் ரம்பத்தை யெடுத்துக்கொண்டு
யிருபிளவாய்ச்செய்திடவே சிரசில்வைத்து
துன்பமுடன்வானவர்கள் நீர்விட்டேங்க
துவக்கின்றார் கரகரென அறுக்கின்றாரே.

வசனம்.

மயூரத்துவசராசன் சுவாமியைத் தோத்தரித்து பஞ்சபூதங்களும் ஒன்றாகி பெண்சாதிபிள்ளை யிரண்டுபேரையும் அழைத்து ரம்பத்தினாலே தன்தேகத்தைத் அறுக்கச்சொல்லும் போது குமுத்துவதியம்மன் குமாரனாகிய தாமரைத்துவசனுடனே சொல்லுகிற விதங்காண்க.

குமுத்துவதி தரு.

பூட்டுமைந்தா ரம்பந்தன்னை புண்ணியர்சிரசைக்கொய்ய
நாட்டுந்திருமால்பதத்தை நாமிருவருமெண்ணியே-சுரு
ராசன்மனதின்படி நேசமதாகவே
பூசனைசெய்துநீ தாசனுமாகவே (பூட்)

தாமரைத்துவசன்சொல் தரு.

தாயேசருணமம்மாள் தங்களுத்திரவின்படி
மாயன்மலர்பாதத்தை மனதில்மிகத்துதித்து-அரு

மார்க்கமதாய்மனந் நிர்க்கமதாகவே
கார்க்குமுகுந்தனை நோக்கியேபூசித்து (தாயே)

குமுத்துவதி தரு.

அப்பாமகனேயிந்த அய்யர் மனங்களிக்க
செப்புஞ்சிங்கம்வாயிலகப்பட்ட சிறுவன்விடுதலையாக-சுரு
சிந்தையொன்றாகவே மைந்தனேநீயுமநானும
அந்திரமுனிவர்கள் கண்டுகளித்திட (அப்)

தாமரைத்துவசன் தரு

அரிகரிமுகுந்தாயுந்தன் அன்பர்களை ரக்ஷித்து
மரகதவடிவேநாங்கள் மலர்பாதமதுதிசெய்தோம்-சுரு
வாமனப்பொருளே காமனையருளே
பூமியின்மனுவை சேமமாயளித்த (அரிகரி)

குமுத்துவதிசொல் கவி

ராசனைவருக்கவரளாக் நமர்துமே தணிந்தேனிப்போ
வாசவைகுந்தவாசா மாதுவின்கிருபையாளா
நேசனேயெனையுமிப்போநின்னடிசேர்க்கவேணும்
யீசனேகிருபைதாரும் யெம்பெருமானேபோற்றி.

வசனம்,

அரிகரி ஸ்ரீமந்நாராயணா, கோவிந்தா யென்பிராணநாதனை வாளினால் அநுக்கிரமபடியாய் யென்பிள்ளையும் நானும சந்தோஷமாகத் தணிந்துவிட்டோம் உடனே யென்னையும் தங்கள் திருவடியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் நமோநாராயணா.

குமுத்துவதி தரு.

அரிகரிநாராயணா பரவாசுதேவனே
அரக்கரவேஅரசன் பொறுக்கவே
கரிபாதிமூலமென வந்துரக்ஷித்தவனே
கார்க்கவோகண்ணால் பார்க்கவோ
பக்ஷகூர்மநரசிம்ம பரசுராமபவுதாரா
வாமனேபரந் தாமனே
ரக்ஷிக்கபாண்டவர்க்கு அக்ஷயபாத்திரந்தந்தீர்
ராகவாயெனைக் காகவ
அர்ச்சுனனுயிர்பிழைக்க நித்தம்பிரமாச்சாரியென்றீர்
அச்சுதா ஞானமெச்சுதா
பச்சைமுகில்மேனியனே நித்தியப்பரப்பிரம்மமே
பாருமே முந்திநேருமே
மூல்லசண்டையிலே செந்துர்மனுசவீர்

மூலமே ஆதி மூலமே
பாலனுகவேயிருந்த ஆலிலைமேல்பள்ளிகொண்டோர்
பக்தனே அரிகர்த்தனே
அண்டரெண்டம்ஓரடியாய் அளந்தநெடுமாயனே
ஆரணபரி பூரண
எண்டிசையிலேகிருஷ்ணனாக யிடையர்வீட்டில்வெண்ணெயுண்ட
யீசனேயெங்கள் நேசனே
மாமன்கஞ்சனைக்கொன்று மலையைக்குடையாத்தாங்கும்
மாதவாயெந்தன் யாதவா
சாமனையளித்தஅரி காகுத்தாதாமோதர
காக்ஷியேபரா மோக்ஷியே
அறுத்திடவே நெத்திமட்டும் அரசனிடப்பாகங்காண
அழுகுதேகண்ணீர வழியுதே
உருக்கமுடன்சன்னியாசி ஓடிவந்துகோபமுடன்
உரைக்குரார்மனம் கரைக்குரார்

சன்னாசிசொல் விருத்தம்.

சன்னியாசிகோபமுடனே யெழுந்து
  சாஸ்த்திரமுந்தெண்டையுமே யெறிந்துசிஷன்
தன்னையுமே அடித்துதரி பாவிகையில்
  தானமதுவாங்கவேயென்னை யிட்டுவந்தாய்
மன்னவனும்பெண்சாதி பிள்ளையாசைவைத்து
  மாபாவியழுதுகொண்டு தானமீந்தால்
இன்னமுமே அவன்கொடுத்தால் வாங்கலாமோ
  யெழுந்திருடாவென்றுசொல்லி நடந்திட்டாரே.

வசனம்.

மயூரத்துவசருசனை நெத்திமட்டும் அறுக்கும்போது ராசனுடைய பிடது கண்ணில் நீர்வடிவதை சன்னியாசிபார்த்து ஓடிவந்து சாஸ்திரம் தெண்டு முதலானதும் யெறிந்துப்போட்டு சிஷனை கையினாலே அரைந்து பிள்ளை பெண்சாதிபின்பேரில ஆசைவைத்த மகாபாவிகையில் தானம் வாங்கும்படி யென்னை யிட்டுவந்தாயே யென்று சொல்லுகிற விதங்காண்க.

பிராமணசன்னியாசி தரு.

அழுதுக்கொண்டுராசன் கொடுக்கின்றதானத்தை
அந்தப்பாவிகையில் வாங்கலாமோசிஷா
பழுதில்லாசத்திய பக்தனென்றுரைத்தாயே-சுரு
  பாசபந்தகர நென்றெண்ணுதே
  பரிசுதானம்யிவ னிடத்தில்பெரலாமோ (அசி)

பெண்சாதிபிள்ளைமேல் ஆசைவைத்திடுபவன்
பெரியோர்க்குருகாக வஞ்சகம்செய்தவன்
அஞ்சாதகுலக்காரன் அசத்தியம்செய்கிறவன்
அரசனென்றுபேரை வைத்துக்கொண்டானவன்
அவனைறுஞ்சுடமா விடுவேனோ
அஷ்டமத்துச்சனிசன் போல்தொடுத்தானே-சரு

அதில் பலக்கையும் பதிகுலத்தையும்
அடங்கலும்மேவறாத் துடங்கவேசபிக்குரேன் (அழு)

இல்லையென்றால்முன்னமே இவனிடம்வருவேனோ
இந்தத்தேசம்விட்டால் யெங்கையும்பெருவேனே
சொல்லுக்குகந்தபடி சும்மாயவன்தருவானே
துஷ்டத்தனவார்த்தைகேட்டு சொல்வீறாய்ப்போனே
தூரத்தினமழியவும் காலங்களாச்சுதே
துக்கப்படுவாரென்று தெரியாமல்போச்சுதே-சரு

தோதகனே அந்த காதனையிப்போ
தொடுவழக்கிட்டுமே விடும்படிசெய்குரேன் (அழு)

சிங்காரசனவன்பிள்ளையைக் கொல்வானே
தேசகாலமாச்சுதென்றவன் சொல்வானே
யெங்கேயினிபோவேனென் றேங்கலானேனே
இந்தமயூராசன் யிடுக்கனென்றறியேனே
யெடக்கான துஷ்டபயல் ஒருவனிருக்குறான்
யெதுத்தோர்களைநாட ஒட்டாமலடிக்குறான்-சரு

யெடுத்துமே அவனைக் கெடுத்துவிட்டுமே
யிப்போதேநான் தப்பாமல்சபிக்குரேன் (அழு)

குமுத்துவதிசொல் கவி.

அந்தணர்வேஷமொடு அப்புறம்போகும்போது
கொந்தநறமாலைசூடும் குமுத்துவதேவியாரும்
மைந்தனுடன்சன்னியாசிபக்கல் வருந்தியேசரணம்செய்து
யெந்தன்மேல்கோபம்வேண்டாம் யிராசனைரக்ஷிப்பீரே.

வசனம்.

சன்னியாசியானவர் ஓடும்போது குமுத்துவதேவி யம்மனும் தாமரைத்துவசனும் ஓடி சருணஞ்செய்து யெங்கள்மீதில் கோபம்வையாமல் யெங்கள் அரசனை ரக்ஷித்தருளுமையா சுவாமியென்று அம்மன் துயரத்துடன் வணங்கிசொல்லுகிற விதங்காண்க.

குமுத்துவதி தரு.

சருணம்சருணமையா சன்னாசிதேவனே
தயவுகள் புரியுமையா-சரு
சகலகலையறிந்த சுவாமியென்னுதனே
அகலவேசெய்கின்றீர் அபயம்அபயமய்யா (சரு)

பிருமணசன்னாசி தரு.

அழுதுதானங்கொடுத்தால் வாங்கேனானம்மணி
அரசன் தேவியாரே-சரு
ஆசைகள்வைத்துமே பாசம்விடாமலே
தாசன்போலேயிருந்து மோசஞ்செய்யலாமோ (அழு)

குமுத்துவதி தரு.

ஆசைவைத்தபேர்கள் தானங்கொடுப்பாரோ
அய்யா சன்னாசியாரே-சரு
அச்சுதன்போலவே பட்சமுடனேவந்து
ரக்ஷித்தருளுமே நந்தநாராயணா (ஆசை

பிருமணசன்னாசி தரு.

உத்தமியென்றிருந்தேன் சத்தியந்தவறிசொன்னாய்
உதவாதே அம்மணி-சரு
ஒருமனதாய்மன்னன் சரிவராயில்லை
பிரியமில்லாமலே தருவதுதகுமோ (உத்த)

குமுத்துவதி தரு.

சத்தியம்தப்போமையா சுவாமிபிரமணதேவா
சஞ்சலம் வேண்டாமையா-சரு
சருணம்சருணமென் குருமுனிநாதா
தருணமிந்தவேளை வரமதுதருவாய் (சத்)

சன்னாசி விருத்தம்.

ராசனேசொல்லக்கேளும் நாடியேவுள்ளந்தன்னில்
ஆசைகள்வைத்துயேயும் அழுதுமேதானந்தந்தால்
நேசமாய்வாங்கொண்ணாது நெடியதோர்சிங்சம்கேட்டால்
பாசத்தோருடலம்வேண்டாம் பாங்குடன்சொல்லுவானே.

வசனம்.

அகோ கேளும் மகாராசனே உன்னுடைய சிந்தையில் ஆசையை வைத்துக்கொண்டு கண்ணீர் விட்டழுது தானங்கொடுத்தால் அந்த சிங்கமானது பரசபந்தமான உடலம் வேண்டாமென்று சொல்லும் ஆகையால் யிந்த தானம் வேண்டாம் மகாராசனே.

பயூரத்துவசன் தரு.

துக்கப்படவுமில்லையே சதுர்தேவபிராமணா
யோகசன்னாசியே துக்கப்படவுமில்லையே
அக்கிஷமேதெனக்கு அச்சுதன் தன்னைவிட
திக்கொருவரில்லை தேசிகனே சுவாமி-சரு
தேவாதிதேவனே மூவாதிபனாய்வந்த
தாவாயென்னுடல்தன்னை மேவிசிங்கத்துக்கிடு (துக்)

அழுதாலிரண்டுகண்ணுமே ஜலமதுபெரிகியேநிலமதிலொழுகுமே
பழுதாயிருக்க நண்ணுமே
பிழைகள்சொல்லவும்போமோ பிருமண்சன்னாசியே
பேரின்பஅமுர்தத்தை வாரியுண்பதுமாக-சரு
பேதமில்லாயெனக்கு துதிஉரைத்திடவும்
பாதகம்நேறலோ ஆதிமூலமே (துக்)

வலப்பாகம்செய்தபுண்ணியம் மாதவகேசவயாதவநருளினால்
நிலைக்குமதுவே கெண்ணியம்
யிளைப்பாறி-துகண்ணும் யேங்கிமனதுவாடி
யிசற்கற்புதமில்லை யென்று அழுதுதையோ-சரு
பிதைவிடமனதினில் பதிமீதில்பெண்டுபிள்ளை
நிதிமீதிலாசையும் அதையொருமிச்சமில்லை (துக்)

அடியேன்மேல்கிருபைசெய்து அரிகரிமுகுந்தனேமுராகரிவரதனே
துடியாமல்பாதி கொய்துமே
நெடியமாலர்புதமாய் நெரிங்கிசிங்கத்துக்கீந்து
நேசமானசுதனே மீட்டுக்கொள்ளுமையா-சரு
செரியேபரமபதக் குரியேகருணைதாரும்
அரிதாள்மாதவமே சிரிபேன்பிழைபொறுக்க (துக்)

மயூரத்துவசன் வசனம்.

கேளுமையாசுவாமி பிராமணசந்நியாசியே யென்னுடைய வலதுயாகமாத்திரம்நல்லபூசாபலம்செய்தது ஸ்ரீமந்நாராயணருக்கு அற்புதமாகயிருக்கின்றபடியால் என்னிடதுபாகமானது நாமென்னபாவம்செய்தோம் சுவாமிக்கு அற்புதமில்லாமல்போச்சுதேயென்று யிடதுகண்மாத்திரம் துக்கப்பட்டதேதவிர நான்வேறொன்றும் ஆசை வைக்கவில்லை சுவாமி சந்நாசியாரே.

பிராமணசன்னாசி கவி.

உத்ததோர்பக்தன்போல உகமானங்கூறவந்தாய்
குத்தமேயிருக்குதிப்போ கும்பிடுங்கள்ளாபோபோ
பத்தியேதானம்வேண்டாம் பாவிநீயென்றுசொல்லி
கர்த்தனார்சிஷனோட கண்முன்னேமறைந்திட்டாரே.

வசனம்.

கேளும்மகாராசனே நீரோன் மகாபத்திவானைப்போலே உகமானவார்த்தைகளைச்சொல்லவந்தாய் நீஎன்னசொன்னபோதிலும் உன்பேரில் குற்றமிருக்கின்றது கும்பிடுங்கள்ளனை நம்பக்கூடாது உன்னுடையதானம் யெனக்குவேண்டியதில்லை போவென்று பிராமணசன்னியாசியானவர் சிஷனுடனே யிருவருமாய்கையாகமறைந்துவிட மயூரத்துவசராசன் அதிகவருத்தப்பட்டு சுவாமியை தோத்திரம்செய்கிறவிதங்காண்க.

மயூரக்துவசன் கவி.

அரிகரிமுகுந்தாநந்தா அச்சுதாவாசுதேவா
முராரிதேவகிருஷ்ண மூர்த்தியேகடவுளானே
கரிதனையடுவில்கார்த்த கார்முகில்மேனியானே
சிறுவன்மேல்கிருபைவைத்து சீதருவருகுவாயே.

மயூரத்துவசன்-தரு.

அரியோகரிநாராயணா ஆதிமூலமே
சிரியன்மீதில்குத்தம்வைத்து யெங்கேபோனீரே
மாயமாகப்போவதுவும் வஞ்சகமுண்டோ
பேயன்மீதில்குத்தங்களும் பேதகமுண்டோ

சத்தியந்தவரினேனே தாமோதரனே
சித்தம்வைத்துயென்னையாளும் தேவரானே
பெரியோர்களைவணங்காத பேயனானாலும்
சிரியோர்களையிடர்பேசும் வாயனானாலும்
மாதவாகேசவகஅரி வந்துகாருமே
சிதருநந்தாமுகுந்தா சீக்கிரம்வாருமே
அஷ்டாக்ஷரத்தைநினையாத அசடனானாலும்
துஷ்டத்தனமாகப்பேசுங் கசடனானாலும்
கோவிந்தாவென்றபேர்க்கு குறைகள்தீருமே
தாவியுன்னைத்துதிப்போர்க்கு தயவுபாருமே.
அரிகரிபுருஷோத்தமா அமலநாதனே
முரகரிமதிருகனே மூலபோதனே
என்னாளுந்துதிப்போர்பங்கில் யிருக்கும்கேசனே
அண்ணசாமிதாசனுக்கு அன்பில்நேசனே - அரி

சுவாமி விருத்தம்.

ஏகமனதாய்மயூரத்துவசராசன்
யிருகரமுங்கூப்பியேதுதிக்கும்போது
காகுத்தன்மனங்களித்துசங்குசக்ர
கருடவாகனரூடராய் மார்பில்மாது
நாகரீகமாய்விளங்கும் அமரர்போற்ற
நன்மலர்கள்தூவிபொன்மாரிபெய்ய
திரேகமுடனர்ச்சுனனும் அரிகில்நிற்க
தேவகின்னராருடனேவருகின்றானே.

வசனம்.

அகோஇதெப்படியென்றால் மயூரத்துவசராஜன் தனது யிரண்டு கைகளையுங்கூப்பிசிரசின்மீதுவைத்துக்கொண்டு ஸ்ரீமகாவிஷ்ணுவை நோக்கித்தோத்திரம் செய்யும்போது சுவாமியானவர் கருடவாகன மேரி சங்குசக்கிரமும் மார்பில் லக்ஷ்மியும் துளசிமாலையும் பிரகாசிக் கும்படி வைகுந்தசுரூபத்துடனே தேவர்கின்னரர் கிம்புருடர்புடை சூழ அர்ச்சுனன் அருகில்நிற்க சுவாமியானவர் மயூரத்துவசராசன் முன்னேவருகிற விதங்காண்க.

சுவாமி தரு.

அரிவாசுதேவர்வந்தார் வைகுந்தவாசர்
அரிவாசுதேவர் வந்தார்
பரிபூரணதயாளன் பரமபுருஷோத்தமன்
கரியைரக்ஷித்தமாயன் காகுத்தனென்றயீசன் - சுரு

கன்னியரிருபுரம் சாமரைபோட
கின்னரனாரதர் கீதங்கள்பாட அரி

அண்டபிரண்டபுவனம் என்றும்ரக்ஷிக்குமாயன்
அனந்தம்சீவராசிகள் அன்பில்வளரும்நேசன்
தொண்டர்க்குத்தொண்டனாம் துவாரகையாதவர்வீட்டில்
வெண்ணெயுண்டிடும்வாயன் வேதனாதநாரணன் - சுரு

சோதிமின்னல்போல் முடிகள் துலங்க
மாதுமார்பினில் வளையவிலங்க அரி

மச்சகூர்ம்மகிருஷ்ண நரசிம்மஅவுதாரன்
வராகபரசுராமா வாமனனெம்பிரன்
பக்ஷமாய்ரகுராம பவுத்தகலிக்கதிரன் - சுரு

பக்தர்களுந்தினம் உத்தமர்வாழ்த்த
நித்தியம்திருவடி நந்தியேபோற்ற அரி

மனுநீதிதவறாத மயூரத்துவசராசன்
மன்புசோதிக்கவந்த மாதுக்குகந்தநேசன்
அனுதினமும்அடியார் அன்பில்பரவுந்தாசன்
அண்ணாசாமிதுதிக்கும் ஆனந்தமானவாசன் - சுரு

அற்புதமானவர் தற்பரப்பொருளே
கற்பகத்தருவே யிப்புவியருளே அரி

சுவாமி கவி.

அன்னைபோல்மாயனாரும் அரசன்முன்வந்துதோன்றி
சென்னியிலிருந்தரம்பம் சீக்கிரம்வாங்கிப்போட்டு
மன்னவன்சிரசைபோக்க மகிழ்ந்துகைபால்பிடிக்க
நன்னெறியுடனேபோற்றி நயந்துடன்துதிசெய்வேனே,

வசனம்.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் மயூரத்துவசராஜன்முன்னே பிரசன்னமாகவந்து சிரசில்யிருந்த ரம்பத்தை வாங்கிப்போட்டு இரண்டுகையினாலும சிரசைசேர்த்துப்பிடித்தமாத்திரத்தில், எப்போதும்போலே சிரசு ஒட்டிக்கொள்ள ஆனந்தக்கடலில்மூழ்கி, எழுந்தவன்போல் சுவாமியைத்தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

மயூரத்துவசனன்-தரு

சருணம்சருணம்அரிகோவிந்தா கருணாகரனேகலிதீர்ப்பரனே
தருணமிதுவேளை தற்காத்தருளுவாய்-சரு
கல்லாதவனே பொல்லாதவனே
அல்லலறுத்தென்னை யாட்கொள்ளுவாயே-சரு
அடியாரிடத்தில் குடியாய்மனத்தில்
நெடுமாலேதினம் நிறைந்தபராபரா-சரு
நித்தாசருணம் நிமலாசருணம்
பக்தர்க்கருளும் பரனேசருணம்-சரு
விண்ணவர்தேவா யென்றென்றைக்கும்வாவா
அண்ணாசாமியை ஆதரிப்பவனே-சரு

மயூரத்துவசன்-விருத்தம்.

பூதலத்தைஓரடியாய்யளந்தபாதம்
புண்ணியர்கள்தபஞ்செய்து காணாத்தாலே
பாதகம்விட்டகன்றோட யெனதுகண்ணில்
பார்த்துதெரிசித்திடவும் பலனைப்பெற்றேன்
ஸ்ரீதரனேஅரிமுகுந்தாவாசுதேவா
திருமலையில்மேவுகின்ற வெங்கிடேசா
ஆதரவாரக்ஷிக்க வந்தமூர்த்தி
அச்சுதனேஅடிமைகொள்ளு மாதியோனே

இதுவுமது

கருடவாகனமுடனே சங்குசக்கரம்
கனகநவ்மணிதுளபமாலைமார்பில்
இருபைதரும்உன்பாதிருவடியுங்கண்டேன்
கசேந்திரனைரக்ஷித்த பாதங்கண்டேன்

பெருமையுடனருள்கிருபா னேக்கங்கண்டேன்
பேரின்பயமுர்தத்தைவாரியுண்டேன்
திருவடியெனதுசென்னி மீதிர்கொண்டேன்
திருமலையில்மேவுகின்ற யாதியானே.

இதுவுமது.

ஈரேழுபுவனமெல்லாம் நிறைந்துநின்று
எண்பத்துநாலுலக்ஷம்சீவனுக்கும்
நேரோகப்படியளந்துகார்க்குந்தேவா
நின்னடியைத்துதித்திட்வும்ரூளுமய்யா
ஓராறுமுகவனுக்கு மாமனான
ஓம்நமோநாராயணா அரிகோவிந்தா
சீராகசெல்வபொருள் ஞானந்தாங்கும்
திருமலையில்மேவுகின்ற யாதியானே

சுவாமி தரு.

வரமனுதந்தோம் நீவேண்டி வரமனுதந்தோம்
வரமனுதந்தோம் மயூரத்துவசனே
அரம்பொருளின்பமும் ஆயுசும்நீபெற-வர

இரத்தினபுரமேசெனங்களும் சித்தமாய்திரமே
பக்தர்களாகிய பரமபாகவதரும்
சத்தினபேர்க்கெல்லாம் நல்லவரந்தந்தோம்-வர

இன்னம்சிறுதுகாலம் உன்னிடபேரிது
பன்னுமென்திருவடி பரமபதமேசேர
மன்னனேதேவியும் மைந்தனும்சீராக-வர

புண்ணியர்புகழுவிலாசத்தை விண்ணவர்மகிழ
அண்ணாசாமிதாசன் அன்பில்குடிகொண்டு
எண்ணியபொருள்களை இசைந்துகொடுத்தோம்-வர

சுவாமி கவி.

மன்னர்கள்முடிவணங்கும் மயூரத்துவசனேகேளாயிப்போ
உன்னைநான்மனஞ்சோதித்தேன் உண்மையைமெச்சிக்கொண்டேன்
இன்னமும்சிறுதுகாலம் இராச்சியமரசுசெய்து
நன்னிலைப்பதவிதந்தோம் இராசனேவாழிவாழி

வசனம்.

எனது அன்புள்ளபக்தனுகிய மயூரத்துவசருசனே உன்னுடையமனதைசோதிக்கும்படியாக நான் சந்நியாசிவேஷமாய்வந்து உன்பக்திக்குமெச்சிக்கொண்டேன் யென்னுடைய தெரிசினமும் தந்தேன் இன்னம்சிலகாலம் அரம்பொருளின்பத்துடனே அரசாட்சிதம்செய்து நமதுபதவிக்கி வரும்படி வரம்தந்தோம் மகாருசனே.

மயூரத்துவசன் அர்ச்சுனனுக்குசொல் விருத்தம்.

அஸ்த்தினபுரத்தையரசுசெய்யும் தர்ம்மருக்
கிளையதனஞ்சனே உன்னஸ்வத்தாலே
அச்சுதனைதெரிசித்து பதிவிபெற்றேன்
அனந்தம்யாகத்தினிட பலனைப்பெற்றேன்
உச்சிதமாயெனது அஸ்வ முனக்குத்தந்தேன்
ஒருகுடையிலாளுகின்ற தேசந்தந்தேன்
மெச்சிவெகுமானங்க ளனேகந்தந்தேன்
விரைவுடனேயாகமதை முடித்திடாயே.

வசனம்.

அஸ்தினபுரத்தை பரிபாலனம்செய்து வருகின்ற தர்ம்மபுத்திரமகாருசனுடைய தம்பியாகிய அர்ச்சுனமகாராசனே நீ செய்யா நின்றயாகக்குதிரையினலே ஸ்ரீமன்னாராயணருடைய திருவடியை தெரிசித்து நல்லபதவிபெத்தேன் அதினலே அனந்தங்கோடி அஸ்வயாகத்தினுடைய பலனையும்பெற்றேன் நான் இனியாகம் செய்யவேண்டியதில்லே நம்மிடயாகக்குதிரையும் சிலதேசங்களும் வேண்டிய வெகுமானங்களும் உனக்குததந்தேன் நீர் அஸ்வமேதயாகத்தை நிறைவேத்தும் அர்ச்சுனமகாருசனே.

மயூரத்துவசன் விருத்தம்.

திருமாலும்வைகுந்த சொரூபியாகி
ஸ்ரீகிருஷ்ணவுருவமதாய் நிற்கும்போது
ஒருவராலுமகிமைதனை யிரைப்பாமோ
ஓம்நமோநாராயணா வென்றுபோற்றி

அருமையுள்ள தாமரைத்துவசனேகேள்
அமர்க்களத்தில்பிரத்திமன்னன் முதலாய்சேனை
சிறுமைகளை நீக்கவேவேண்டுமிப்போ
சீக்கிரத்தில் அவர்களையுமழைத்திடாயே.

வசனம்.

அகோதெப்படியென்றால் மயூரத்துவசராசன் அர்ச்சுனராசனுக்குயாகத்தை நிறைவேத்துமென்று சொன்னமாத்திரத்தில் சுவாமியானவர் வைகுந்த சொரூபதாரி யெப்போதும்போலே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாகநிற்க ராசன்கண்டு உம்மிடமகிமையை தேவர்களாலும் அறியப்போகுமோ ஓம் நமோநாராயணாவென்று தோத்திரம்செய்து தாமரைத்துவசனைப்பார்த்து ரணக்களத்திலே சண்டையில்சிறுமையடைந்த பிரத்திமன்னன் விஸ்வகேதுமுதலான சகலராசர்களையும் மனக்குளிர்ச்சியடையத்தக்கதாக அதிக சீக்கிரத்தில் வழைப்பியும் குமாரா.

மயூரத்துவசன் விருத்தம்.

வல்லமையாய் ரணக்களத்தில் சண்டைசெய்த
மன்னரெல்லாம்வரவழைத்து அந்நாளாய்
நல்லமுதுவிருந்துசெய்து களிப்புண்டாக
நாட்டியமும்வாத்தியங்கள் முழங்கச்செய்து
சொல்லவொண்ணாக்கரிபரிகள் ரதமுங்காலாள்
சொர்ணமண்டபத்தில் வெகுமதிகளீந்தந்து
இல்லையென்றுசொல்லாமல் ரதமும்தந்து
யின்பமுடன்விசையனுடன் நடந்திட்டாரே

வசனம்.

இரணக்களத்திலேயிருந்த ராசாக்கள் யாவற்றையும் தாமரைத்துவசனைவிட்டு அழைத்துவந்து அந்நாள் வைத்திருந்தநல்லவிருந்துமுதலானதும்செய்து தேவஸ்ரீகள் நடனநாட்டியம்செய்ய பதினெட்டுவகைவாத்தியமும் தாம்தாமென்றுமுழங்க அனைவர்களும் ஆனைசேனைபரிவாரங்கள் முதலாகியதும் வெகுமதியாகக்கொடுத்து அர்ச்சுனமகாராசனுடனே மயூரத்துவசமகாராசனும் அஸ்த்தினபுரத்திற்கு சுவாமியுடனேகூட நடந்தார்களய்யாசுவாமி.

பொது கவி.

இப்படியிருக்கும்போது யெழிலஸ்தினபுரியைநோக்கி
ஒப்புடன்போவோமென்று உயிர்முடிதரித்தகிருஷ்ணர்
செப்பமாய்சேனைகூடி செகமெலாம்காணவேதான்
அப்படிபோவோமென்று அன்பாகநடக்கின்றாரே

வசனம்

அகோ கேளுங்கள் சபையோர்களே இனிமேல் நடக்கும்விஷயம் இரத்தினபுரம்விட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனமகாராசனும் இன்னம் அனேக சேனைசயின்னியங்களும் கூட்டிக்கொண்டு அஸ்தினபுரம்நாடிவந்தார்களய்யா சுவாமி.

வாழி விருத்தம்.

இந்தநேர்யாகந்தன்னை யெழுதினேன்வாழிவாழி
மைந்தனும்அண்ணசாமி மகிபாலபூபன்வாழி
சிந்தையும்மகிழச்சொன்ன செந்தமிழ்நாடகமும்வாழி
முந்திபின்முடிவும்செய்த மும்மூர்த்திவாழிவாழி

தாமரைத்துவசன் சண்டை நாடகம்

முற்றிற்று.

58874

உ

கடவுள் துணை.

நூதன புத்தக விளம்பறம்

காக்கையர்காடி	0	12	0
கந்தர்காம.	0	8	0
வைத்திய திரவுகோல்	0	8	0
புஜண்டர்காடி	0	5	0
சோதிட அரிச்சுவடி 1-பாகம்	0	3	0
மேற்படி 2-ம் பாகம்	0	3	0
வைத்திய அரிச்சுவடி	0	3	0
பப்பிரவாகன்சண்டை நாடகம்	0	8	0
விஜயகர்கலியாணம்	0	5	0
புலந்திரன்தூதுநாடகம்	0	5	0
வெங்கடேசப்பெருமாள்நாடகம்	0	5	0
காத்தமுத்துநாடகம்	0	5	0
இராமரிஷிநாடகம்	0	5	0
கிருஷ்ணன்தூதுநாடகம்	0	5	0
நளாயினிநாடகம்	0	5	0
குறவஞ்சிநாடகம்	0	5	0
மாடுபிடிசண்டைநாடகம்	0	5	0
அரவாணகடபலிநாடகம்	0	5	0
அல்லிநாடகம்	0	5	0
திருநீலகண்டர்நாடகம்	0	5	0
வாலிமோக்ஷ நாடகம்	0	5	0
அபிமன்னன்சண்டைநாடகம்	0	5	0
சுபத்திரைமாலையீடுநாடகம்	0	5	0
பின்ஞ்ஞானிகுறவஞ்சிநாடகம்	0	5	0
கயநாடகம்	0	5	0
கர்ணமோக்ஷநாடகம்	0	5	0
மாணிக்கவாசகர்நாடகம்	0	5	0
சுந்தரியீமாலைநாடகம்	0	8	0
பவளக்கொடிநாடகம்	0	5	0
துளசிதாசர்நாடகம்	0	5	0
ஞானிவெத்தநாடகம்	0	5	0
அரக்குமாளிகைநாடகம்	0	5	0
தமாரைத்துவசன்சண்டை நாடகம்	0	8	0
தாடகைசம்மாரநாடகம்	0	5	0
பதினாலாம்நாள் சயிந்தவன்சண்டைநாடகம்	0	5	0
பாரதப்போரில் முதல்நாள் சண்டைநாடக	0	5	0

எமது விலாசம்,

ஜே-முனிசாமி முதலியார்

கறையாங்குட்டைவீதி நெ. 54-ஜோபீபாஸ் மெதராஸ்

5A
7-94